GOKULAM

டிசம்பர் 2008 • 80 பக்கங்கள் • விலை ரூ. 8/-

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



அனிமேஷன் அதிசயம்!


கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


751


752


753


754


755


756


757


758


759


760


761


762


763


764


765


766


767


768


769


770


771


772


773


774


775

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்..

கோகுலம்

கல்கி


டிசம்பர் 2008 மலர் : 26 இதழ் : 11



அன்பே செல்வம்!

'அள்ளக் குறையாதது; கொடுத்தால் தீராதது' என்று கல்வியைப் பற்றிச் சொல்வார்கள். அன்பும் அப்படித்தான். கல்வியை விடவும் மேம்பட்டது அன்பு!

நாம், நம் பெற்றோர், உடன் பிறந்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள் என்கிற எல்லைகளைக் கடந்து, எல்லோரிடமும் அன்பு காட்டும் தன்மைதான் தெய்வகுணம்!



தனக்கு உதவியவர்களை மட்டுமல்ல; தனக்குத் துன்பம் அளித்தவரையும் மன்னித்து இரட்சிக்கும்படி வேண்டிய அந்த தெய்வ குணத்தின் அடையாளம்தான் ஏசு பெருமான்!

அன்பு என்பது, எந்த எதிர்பார்ப்பும் இல்லாதது; எந்த விதத்திலும் சுயநலம் அற்றது; எல்லா உயிர்களிடமும் நேசம் கொண்டது; எந்த ஜீவனிடமும் வெறுப்பில்லாதது என்கிற உண்மை விளக்கமாக உலவிய ஏசு பெருமானின் அவதாரத் திருநாள் இந்த மாதம் வருகிறது.

அந்த அன்பு நம் அனைவரின் எண்ணங்களிலும், செயல்களிலும் இடம் பெறட்டும். அதுதான், கிறிஸ்துமஸ் திருநாள் நமக்கு உணர்த்தும் செய்தி!

அன்புடன்

கோகு

கடி 'O' கடி

மண் அரிப்பைத் தடுக்கும் வழி?






ஆசிரியர் : மண் அரிப்பைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

மாணவன் : மண்ணுக்கு சொரிஞ்சுவிட்டு நைசில் பவுடர் போட வேண்டும் சார்.

- வே.சித்ரா,
கும்மிடிப்பூண்டி



எவ்வளவுதான் முட்டை போட்டாலும் வாத்தியார் கோழியாக முடியாது?

- க.வேடியப்பன்,
கும்மிடிப்பூண்டி

தங்கச் செயினை உருக்கினா தங்கம் வரும். வெள்ளிச் செயினை உருக்கினா வெள்ளி வரும். ஆனா சைக்கிள் செயினை உருக்கினா சைக்கிள் வராது.

- ப.கோபிபச்சமுத்து,
கிருஷ்ணகிரி



இப்பகுதிக்கு நீங்களும்
'கடி O கடி'
என்று குறிப்பிட்டு உங்கள்
படைப்பை
அனுப்புங்கள்

என்னதான் டி.வி. விடிய விடிய ஓடினாலும் அதனால ஒரு இன்ச்கூட நகர முடியாது.

- வே.தனசேகர்,
உறுப்பினர் எண் : 31,
கும்மிடிப்பூண்டி

கல்கி
கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்: சீதா ரவி

வடிவமைப்பு:
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன், பா.கோபால்

தொலைபேசி:
044 - 4343 8888 (30 lines)
தொலைநகல்:
044 - 4343 8899
மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு:
gokulam@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு:
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு:
info@kalkiweekly.com
சந்தா விவரம் :
உள்நாடு: ஒரு வருடம் : ரூ. 96/-
வெளிநாடு (விமானத்தபால்):
ஒரு வருடம் : ரூ. **1000/-**

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai-600 032.

குழந்தைகளின் குதூகலம்!

'நிலா! நிலா! ஓடி வா! நில்லாமல் ஓடி வா!' என நிலவைக் காட்டிச் சோறூட்டும் நிலையில் பல தாய்மார்கள் இன்று இல்லை. முற்றத்தில் அமர்ந்து பேரப் பிள்ளைகளுக்குக் கதை சொல்லி உணவூட்டும் பெரியவர்களும் இல்லை. ஆனாலும் குழந்தைகள் 'குட்டி ரோபோக்கள்' போல ஆகாமல், நம் நாடு, மொழி, கலாசாரம், பண்பாடு மற்றும் பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுக்கும் பணியை அருமையாகச் செய்கின்றன அனிமேஷன் கதைகள்.



முன்பெல்லாம் குழந்தைகளை மகிழ்விக்கப் பெரிதும் பயன்பட்டது படக் கதைகள்தான். இன்றைய தாத்தாக்களாக இருக்கும் நேற்றைய குழந்தைகள் படக்கதைகளை விரும்பிப் படித்தனர். பேசாப்படம், பேசும் படம் எனத் திரைப்படம் வளர வளர, படக்கதைகளும் உயிரூட்டம் பெற்றன. இருபரிமாண (2டி) அல்லது முப்பரிமாண (3டி) படங்களை வேகமாக இயக்கச் செய்ததன்மூலம் படங்கள்உயிரூட்டம்பெற்று



வாகீஷ்
மூன்றாம் வகுப்பு

Reader Rabbit Personalized Math சி.டி மூலம் விளையாட்டாகவே கணக்கு பாடம் கற்றுக் கொண்டு விட்டேன். நான் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு சரியான விடைக்குமாக சேர்த்து எனக்கு வேண்டிய பரிசுப் பொருட்களை prize centerலிருந்து நானே தேர்வு செய்து கொள்வேன். இதில் மூளையும் வளரும், ஜாலியான கேம்ஸும் இருக்கும். 'ரோலர் கோஸ்டர் ரைட்', இனிமையான இசைக் கருவிகளை இசைத்துக் கொண்டே பல்வேறு patterns சொல்லித் தரும் விளையாட்டு. எண்களைச் சரியாகக் கூட்டி சரியான விடையை டைப் செய்தால், ஒரு ஏணியில் முயல் ஏறி water ride போகும். அது பார்க்க ரொம்ப நல்லா இருக்கும்.

❖ முனைவர் ஆசுரா ❖

அனிமேஷன் அதிசயம்!



உயிரோட்டம் கொள்கின்றன. இந்தப் படங்கள் நகரும் படங்களாகவோ அல்லது வீடியோ படக் காட்சிகளாகவோ தயாரிக்கப்படுகின்றன.

1887ஆம் ஆண்டு ஃபிலடெல்ஃபியாவைச் சேர்ந்த எட்வர்ட் மூபிரிட்ஜ் எடுத்த பந்தயக்குதிரை புகைப்படம், அனிமேஷன் காட்சிகளாகப் பதிவு செய்யப்பட்டது. பழங்காலக் குகை ஓவியங்களிலும் பல்வேறு விலங்குகளின் அசைவுகளும் பல நிலைகளில் படங்களாக வரையப்பட்டுள்ளன. இதுவும் முற்கால அனிமேஷன் சிந்தனை எனக் கூறலாம். ஈரானில் கண்டெடுக்கப்பட்ட 5200 ஆண்டுகள் பழமை வாய்ந்த மட்பாண்டத்தில் ஒரு விலங்கின் ஐந்து விதமான படங்கள் வரையப்பட்டுள்ளன. ஒரு உருவம் வெவ்வேறு நிலைகளில் கடந்து போவதை வரையும் முயற்சி இது.




ஹரிப்ரியா


ஏழாம் வகுப்பு

Humorous Stories of Tenali Rama ஒரு சூப்பரான சி.டி.. டி.வி. பார்ப்பதைவிட இந்த தெனாலிராமா மாதிரி சி.டி. பார்ப்பது மிகச் சிறந்த பொழுதுபோக்கு. தெனாலிராமனோட புத்திக்கூர்மையும் சாதுர்யமும் நமக்கு நல்ல படிப்பினைதான். மழை கொட்டினாலும் சரி; வெயில் வாட்டினாலும் சரி. தெனாலிராமனை பார்த்தா பொழுது நல்லா போகும். இந்த சி.டி. ஹிந்தி, ஆங்கிலம்னு ரெண்டு மொழிகள்ல இருக்கு. ஒரு தடவை ஆங்கிலத்துல பார்த்துட்டு, அதையே ஹிந்தில பார்த்தால் நம்ம ஹிந்தி மொழி அறிவும் வளரும்.

'ஜியோர்ஜஸ் மெலியஸ்' எதிர்பாராத விதமாகக் கண்டறிந்த 'ஸ்டாப்-மோஷன் அனிமேஷன்' தொழில்நுட்பமே அனிமேஷன் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது.



★ எட்வர்ட் மைபிரிட்ஜ்



★ ஜியோர்ஜஸ் மெலியஸ்

அனிமேஷன் உத்திகள் :

அனிமேஷனில் பலவிதமான உத்திகள் உள்ளன. தொடக்க காலத்தில் உள்ளதை, 'பாரம்பரிய அனிமேஷன்' என்கின்றனர். இது, ஒரு குதிரை நின்ற இடத்தில் இருந்து கொண்டே ஓடுவதைப் போன்று உருவாக்கப்படும் காட்சி. இந்த முறை 'ரோடோஸ்கோப்பிங்' என்றும், 'செல் அனிமேஷன்' என்றும் அழைக்கப்படுகிறது. அடுத்தது 'முழு அனிமேஷன்'. இதற்கு வால்ட் டிஸ்னி மற்றும் வார்னர் பிரதர்ஸ் உருவாக்கிய படங்கள் சான்றாக அமைகின்றன. 'கட்டுப்படுத்தப் பட்ட அனிமேஷன்', 'தடை - இயங்கு அனிமேஷன்', 'களிமண் அனிமேஷன்', 'கட் அவுட் அனிமேஷன்', 'சில்ஹூட் அனிமேஷன்' என பல்வேறு உத்திகளில் அனிமேஷன் துறை வளர்ந்துள்ளது. கணினி துறையின் வளர்ச்சியால் 2டி அனிமேஷன், 3டி அனிமேஷன் என பல்வேறு நிலைகளில் வளர்ந்துள்ளது.

உலகக் குழந்தைகளும் அனிமேஷன் படங்களும் :

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் குழந்தைகளுக்கு பைபிளில் வரும் கதைகள் அனிமேஷன் படங்களாகக் காண்பிக்கப்படுகின்றன.

அனிமேஷன் கதைகள்




ஸ்ரீஜன்
ஒன்றாம் வகுப்பு

'க்ருஷ்ணா' தான் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவரை மாதிரியே நானும் எந்த ஒரு சின்ன பொருளா இருந்தாலும், அதை எல்லார் கூடவும் ஷேர் பண்ணிப்பேன். நிறைய குட்டி குட்டி ஸ்லோகங்கள், பஜன்ஸ்லாம்கூட அதைப் பார்த்தே கத்துகிட்டேன். என் ஃப்ரண்ட்ஸ் கிட்ட க்ருஷ்ணரோட கதையை சொல்வேன். எல்லோருக்கும் ஹெல்ப் பண்ணனும்னு 'க்ருஷ்ணா' பாத்து தெரிஞ்சுக்கிட்டேன். அவரை மாதிரியே நானும் புல்லாங்குழல் வாசிக்க கத்துப்பேன்.



* மாணிக் சர்க்கார்

புலம் பெயர்ந்த இந்தியர்களுக்கு குறிப்பாக இந்திய சிறுவர் - சிறுமியருக்கு, நம் நாட்டின்





கலாசாரம், பண்பாட்டை நினைவுபடுத்தும் உன்னதமான பணியைச் செய்கின்றன. மாணிக் சர்க்கார் என்னும் இந்தியர், அமெரிக்காவில் தன் இரு மகள்களுடன் வசித்து வருகிறார். அவர் தன்னுடைய மகள்கள் இந்தியப் பாரம்பரியத்தை மறக்கக் கூடாது என விரும்பினார். அதன் விளைவாக 'டு சில்ட்ரன்ஸ் சாங்க்ஸ் ஃபிரம் த ஈஸ்ட்' என்ற முதல் அனிமேஷன் படத்தைக் கொண்டு வந்தார். இவரின் 'தீபா மற்றும் ரூபா' என்னும் அனிமேஷன் படம், சிகாகோ சர்வதேச திரைப்படத் திருவிழாவில் தங்கப் பதக்கம் வென்றது.

பிரம்மாண்டமான அனிமேஷன் படங்கள்:

குழந்தைகளுக்குக் கதை சொல்வது எளிதான காரியமன்று. அவர்களைப் படம் பார்க்க வைக்க வேண்டுமென்றால் காட்சியில் பிரம்மாண்டமும்.



ஸ்ரீராம்
இரண்டாம் வகுப்பு

''என்னோட ஃபேவரிட் 'ராமாயணம்' சி.டி.தான். ராமாயணத்தில் வரக்கூடிய அத்தனை கதாபாத்திரங்களையும் நான் இந்த சி.டி. பார்த்தே தெரிஞ்சுக்கிட்டேன். என்னோட சூப்பர் ஹீரோ பலசாலியான வீர ஹனுமார்தான். பலசாலியா இருந்தாலும், பணிவா இருக்கறதால அனுமார்தான் எனக்குப் பிடிக்கும். ராமர் தன்னோட அம்மா, அப்பா பேச்சை சமர்த்தா கேட்டா மாதிரியே நானும் என் அம்மா, அப்பா சொல்றதைக் கேட்பேன். எல்லார்கிட்டயும் அன்பா பழகுவேன். 'குட்-பாய்'னு பேர் வாங்குவேன்.

சொல்வதில் எளிமையும் தேவை. இராமாயணம் அனிமேஷன் கதையில் இராமன், இலட்சுமணன் தோற்றம் அழகாக உள்ளது. இராமன் தாடகையோடு சண்டையிடும் காட்சி பிரமிப்பூட்டுவதாக உள்ளது. ஸ்ரீகிருஷ்ணர் அனிமேஷன் படங்களில் கிருஷ்ணனின் குறும்புக் காட்சிகள் குழந்தைகளை வெகுவாகக் கவர்கின்றன. வெண்ணெய் எடுத்து உண்ணும் அழகும், வாய்க்குள் உலகத்தையே காட்டும் பாங்கும், யமுனையில் பாம்பின் தலையில் ஆடும் நடனமும், கட்டிய உரலோடு வரும் மிடுக்கும், புல்லாங்குழலிசையின் லயமும் குழந்தைகளை மட்டுமல்ல; பெரியவர்களையும் கவரும். அதே போல, அனுமன் கதைகள் எப்பொழுதும் குழந்தைகளின் "ஃபர்ஸ்ட் சாய்ஸ்."



ஈரானில் கண்டெடுக்கப்பட்ட 5200 ஆண்டுகள் பழைமையான மட்பாண்டத்தில் ஒரு விலங்கின் ஐந்து நிலையிலான படங்கள் வரையப்பட்டுள்ளன.

அனிமேஷன் படங்களின் தேவை :

சிறுவர் - சிறுமியர் மத்தியில் நல்லொழுக்கம் மற்றும் நன்னெறியை வளர்ப்பதில் அனிமேஷன் படங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. இந்து, கிறிஸ்துவம், இசுலாமிய சமயக் கதைகள், நாடோடிக் கதைகள், பஞ்ச தந்திரக் கதைகள், எகிப்திய பழங்காலக் கதைகள், சீனக் கதைகள், சூப்பர் மேன், ஸ்பைடர் மேன், பேட் மேன் போன்ற புனைகதைகள், மிக்கி மவுஸ், டொனால்ட் டக் போன்ற அழகிய வரை கதைகள் எனப் பல அனிமேஷன் கதைகள் வந்த வண்ணம் உள்ளன. குழந்தைகளின் உலகத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களின் மனத்துக்கு மகிழ்வூட்டி, சிந்தைக்கு அறிவூட்ட வேண்டும் என்பதே பெற்றோரின் விருப்பம். அந்த விருப்பத்தை இந்த அனிமேஷன் படங்கள் அழகாகவே நிறைவேற்றித் தருகின்றன.

பெட்டிச் செய்திகள், தொகுப்பு :
நளினி சம்பத்குமார்
அட்டையில் : **ஹரிப்ரியா, வாகீஷ்**
வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**



கவிதைக்குப் பிறந்தநாள்!

"இவர் நமது தேசத்தின் சொத்து. இவரைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்" என்று மகாத்மா காந்தியால் புகழப் பட்டவர் 'மகாகவி' பாரதியார்தான்.

இவர், 11.12.1882 அன்று எட்டயபுரத்தில் பிறந்தார். தந்தை சின்னசாமி அய்யர், தாய் லட்சுமி அம்மாள். பாரதியாரின் இயற்பெயர் சுப்பிரமணியன். கவியாற்றலால், பதினொரு வயதில் 'பாரதி' என்று கௌரவிக்கப்பட்டார்.

இவரது பாடல்களில் முதன் முதலில் அச்சேறியது 'தனிமை இரக்கம்' என்னும் பாடல்தான். 1904ஆம் ஆண்டு ஜூலை மாதம் 'விவேகபானு' என்னும் பத்திரிகையில் முதன்முதலாக இப்பாடல் வெளியானது.

தொடக்கத்தில் தமிழ்ப் பண்டிதராகவும், 'சுதேசமித்திரன்', 'சக்கரவர்த்தினி' போன்ற பத்திரிகைகளிலும் பணியாற்றினார். பின்னர் தீவிர அரசியலில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

இவருடைய பாடல்களில் முப்பெரும் பாடல்கள் எனப் போற்றப்படுபவை கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகியனவாகும்.

வசன கவிதை போன்ற வடிவங்களைத் பயன்படுத்தியதன் மூலம், புதுக் கவிதையின் முன்னோடியாக இவர் கருதப்படுகிறார்.

பாரதியார் சமூகப் பிரச்னைகளை மையமாகக் கொண்ட பல கட்டுரைகளையும் கதைகளையும் எழுதியுள்ளார்.

இவர் எழுதிய 'நவதந்திரக் கதைகள்' தமிழிலக்கியத்தில் குறிப்பிடத்தக்க முயற்சியாகும்.

தமிழ், சமஸ்கிருதம், ஹிந்தி, ஆங்கிலம் போன்ற பன்மொழிப் புலமை பெற்றவர் பாரதி. தாய்மொழிக்கும் தாய்நாட்டுக்கும் சிந்தனையாலும், செயலாலும் ஓயாது உழைத்த பாரதி, 12.9.1921ஆம் நாள் மறைந்தார்.

அவருடைய படைப்புக்களை வாசிப்பது மட்டுமல்லாது, அவரது மொழிகளைப் பின்பற்றவும் செய்வீர்கள்தானே? அதுதான், அவரை மரியாதை செய்யும் முறையாகும்.



நவாசும் அனந்தும்!

நவாஸ் பள்ளிக்குப் புறப்பட்ட சமயம் அவன் தாயார் வந்தாள். ஒரு தூக்கு வாளியை அவனிடம் நீட்டினாள்.

''என்னா இருக்கு?'' என்றான் வாளியைப் பார்த்தபடி.

''பரோட்டா இருக்கு. தொட்டுக்கறதுக்கு சீனி இருக்கு. பள்ளிக்கூடம் விட்டதும் பசிக்கும். அப்ப சாப்பிடு. என்ன?''

''நோம்பு நாளில் சாப்பிடக் கூடாதே?''

''நீ பச்ச புள்ளப்பா! அல்லா ஏத்துப்பார். உனக்கும் சேத்து நான் நோம்பு இருக்கேன். நீ கவலைப்படாம நல்லா படிச்சு, நல்லா சாப்பிட்டு, பெரிய ஆளா வரணும். என்ன?''

''ம்! சரி!'' என்றவனை அவன் தாயார் அணைத்து முத்தமிட்டு அனுப்பி வைத்தாள். நவாஸ் பாய்க்கார தெரு முனை திரும்பும் பொழுது கவனித்தான். மூலைக்கு மூலை போலீஸ் நின்றது.

சுவரில் 'மறக்க முடியுமா அந்த நாளை? மறுக்க முடியுமா நமது உரிமையை?' என்று கறுப்பு நிறத்தில் போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது. நவாஸ், நின்று நிதானமாய் எழுத்துக்கூட்டிப் படித்தான். அதற்குள் ஒரு போலீஸ்காரர், 'ஏய், என்னடா பள்ளிக்கூடம் போகாம நின்னு வேடிக்கை பார்க்கிற? சீக்கிரம் ஸ்கூலுக்கு ஓடு!'' என்று விரட்டினார். நவாஸ் வேகமாய் நடந்து மடத்துத் தெருவில் திரும்பினான். முதலில் ராமர் மடம். அடுத்த மூன்றாவது வீடு அனந்துவினுடையது. நவாசுடன் அதே வகுப்பில் படிக்கிறான் அனந்து.

அந்தத் தெருவில் எல்லா வீடுகளிலும் வாசல் சுவற்றில் காவிப்பட்டை அடிக்கப்பட்டிருக்கும். வாசலில் செம்மண் கோலம் இடப்பட்டிருக்கும். நவாஸ் கோலத்தை மிதிக்காமல் வாசல்படி ஏறி, ''அனந்து'' என்றான். இரண்டாவது சப்தத்துக்கு ஒரு மூதாட்டி எட்டிப் பார்த்தாள். ''என்ன?'' என்று கைஜாடையில் கேட்டாள்.

''அனந்து எங்கே?'' என்றான்.

இடது கை ஆள்காட்டி விரலை கிழக்கே காட்டினாள்.

'கோயிலுக்குப் போயிருக்கிறான்'

W. நடராஜன்



என்பதைப் புரிந்து கொண்ட நவாஸ், உடனே கோவிலை நோக்கி ஓடினான்.

வாசலில் செருப்பைக் கழற்றிப் போட்டு விட்டு உள்ளே போனான். அது, பழைய பெருமாள் கோயில். கூட்டம் இருக்காது. அங்கே, அனந்துவின் தந்தையார் தான் பட்டாச்சாரியார். இடுப்பில் வேஷ்டியுடன் கையில் தட்டும், மறு கையில் மணியுமாய் அனந்து நின்றிருந்தான்.

''என்னடா, இன்னைக்கு ஸ்கூலுக்கு வரலியா?'' என்றான் நவாஸ்.

''இதோ வந்துடுவேன்!'' என்றான் அனந்து.

''பின்ன இங்கிட்டு நிக்க?''

''எங்கப்பா வெளியூர் போயிருக்கா; அதான் இன்னிக்கு நான் வந்தேன். இதோ நிவேதனத்தை முடிச்சுட்டு, ஒரு நிமிஷத்துலே வந்துடுவேன். ஆமாம் செய்யுள் பகுதி ஒப்பிக்கணுமே, மனப்பாடம் பண்ணிட்டியோ?''

''ம், பண்ணிட்டேன்; அது என்னா தட்டுலே?''

''அம்மாக்கு உடம்பு முடியலை; தலைமுழுகிட்டு சாதம் வடிக்க இன்னிக்கு ஆகாது. அதுக்காக, பெருமாளைப் பட்டினி போட முடியுமோ?''

''அதனால?''

''ஒரு அச்சு வெல்லத்தைக் காண்பித்து, துளசி தீர்த்தத்தை விட்டு நைவேத்தியம் பண்ணினால், பூஜை முடிந்தது. நாம், ஸ்கூலுக்குப் புறப்படலாம்!''

''பாவம்டா அனந்து, சாமி; வெல்லக்கட்டி வயித்தை ரொப்புமா? பசிதான் தீருமா?''

''என்ன பண்றது? நாளைக்கு நெய் மணக்க, கொழையக் கொழைய அம்மாவை விட்டு பொங்கல் பண்ணச் சொல்லி படைச் சுட்டா ஆச்சு; இன்னிக்கு இதான்!''

''இதை வேண்ணா வெச்சுக் கும்பிடேன்!'' என்று தன் வாளியைத் திறந்தான்.

''என்னதுடா நிவாஸ் அது?'' என்றான் அனந்து.

''பரோட்டா.''

''ஹை!'' என்று வாளியைத் திறந்து பார்த்தான். இதுவரை அவன் இட்லி, தோசை, சாதம், தவிர வேறு பார்த்தறியாதவன்.

''வாசனையா இருக்கே!''

''ஆமாம். நெய் பரோட்டா!''

''மாமிசம் கலந்திருப்பாளோ?''

''ச்சீ! இதுலல்லாம் போயா சவிச்சி சேர்ப்பாங்க; இல்லை.''

வின்னர்ஸ்!

விடையைச் சொல்; பரிசை வெல்-16ல் கலந்துகொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் :

1) 1797 2) ஹரியானா 3) பக்கத்தோடு இணைந்த (கூடவே) 4) மோரிஸ் மிக்டம் 5) இந்திரன்



''அதென்னது இளகலா என்னவோ இருக்கு. சர்க்கரையா?''

''ஆமாம் சீனிதான்!''

''ஏண்டா, நீ எச்சில் பண்ணலையே?''

''அட அல்லா, இது மத்தியானம் சாப்பிட வைச்சிருக்கேன். இன்னம் வாயிலேயே போடலை!''

''அப்ப சரி!'' என்று அவனது வாளியைக் கையில் எடுத்தான் அனந்து. சுற்றும் முற்றும் பார்த்தான். ஒருவரும் பார்க்கவில்லை.

''ஏண்டா, பெருமாள் ஏத்துப்பாரா இந்த பூஜையை?''

''தெரியலையே! பயம்மா இருக்குடா அனந்து?''

''சரி, சரி பயப்படாதே; 'குகன் கொடுத்த தேனையும், மீனையும் ஏத்துண்டார் ராமன்'னு நம்ம தமிழ் சார் சொல்லி இருக்காங்கல்ல? நிச்சயம் இதையும் ஏத்துப்பார்'' என்றான் அனந்து.

''தேதி இன்னம் கிழிக்காம இருக்கே?'' என்ற நவாஸ் தேதியைக் கிழித்தான். டிசம்பர் 6. அப்பொழுது வெளியே சப்தம் கேட்டது. இருபுறமும் போலீஸ் காவல் செல்ல, ஒரு பெரிய கூட்டம் கோஷம் போட்டுக்கொண்டு சென்றது. நவாஸ் வரும்போது பார்த்த 'மறக்க முடியுமா அந்த நாளை? மறுக்க முடியுமா நமது உரிமையை?' என்ற கறுப்பு பேனரை உயரப் பிடித்துக்கொண்டு, உரத்து கத்திக்கொண்டு போனது பேரணி. தன் உறவு மனிதர்கள் பலர் அதில் செல்வதை, நவாஸ் கோயில் ஜன்னல் வழியே ஒளிந்துகொண்டு பார்த்தான். கூட்டம் போய்க்கொண்டே இருந்தது.

''குகன் கொடுத்த தேனையும், மீனையும் ஏத்துண்டார் ராமன்னு நம்ம தமிழ்சார் சொல்லி இருக்காங்கல்ல? நிச்சயம் இதையும் ஏத்துப்பார்''



அனந்து அவசரப்படுத்தினான். ''நாழியாயிடுத்துடா நவாஸ்; முதல் பெல் அடிக்கப் போகுது. சீக்கிரம் வா; பூஜையை முடிச்சுட்டுப் போகணும்; எங்க, அந்த மனப்பாடப் பாட்டை சத்தமா ஒப்பி; நான் அதற்குள் நைவேத்தியத்தை முடிச்சிடறேன்!''

''பச்சை மாமலை போல் மேனி,
பவளவாய்க் கமலச் செங்கண்,
அச்சுதா அமரரேறே ஆயர்தம்
கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர....''

நவாஸ் சப்தமாய் ஒப்பிக்க, அனந்து உத்தரணியிலிருந்து துளசி தீர்த்தத்தைவிட, அகல்விளக்கு ஒளியில் பெருமாள் புன்னகை பெரிதாய் விரிந்தது. டிசம்பர் 6 படபடத்துக் கொண்டிருந்தது காலண்டரில். ●

பரிசு பெறுவோர் :


1. மு.சிவரஞ்சனி, திருவாரூர்
2. அ. இளம்பரிதி, கொன்றைக்காடு
3. ஸ்ரீநிதி இராமகிருஷ்ணன், வடவள்ளி
4. எஸ்.கௌதமன், ஆர்.எஸ்.மங்கலம்
5. கே.கவிதா, ஆற்காடு
6. வி.கே.வேல்முருகன், அருப்புக்கோட்டை
7. ப.கீர்த்தனா, திருச்சி
8. எம்.நித்தீஸ் பாலாஜி, காரைக்கால்
9. ஜே.வி.அமரபாரதி, திருவண்ணாமலை
10. தினேஷ்குமார், போரூர்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துக்கள்; கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!

இன்னும் கொஞ்சம் வேணுமா?

கதை : பி.புலேந்திரன்
ஓவியம் : ராம்கி




அதைக் கேட்டவுடன்...
என்னது... ஒரு லிட்டரா? எங்கே இருக்கு?
எங்களுக்கு வேணும். நாங்க வாங்கிக்கிறோம்.
சேவலோடு நடந்தன.
எப்படி ஒரு லிட்டர் கிடைச்சுது?
தம்பிங்க உடம்புல அதிகமா ஊறிடுச்சு!
ம்... அதனாலே?
ஊசி வழியா ஒரு லிட்டர் எடுத்துட்டேன்.
நடந்தபடியே...
வீடு, ரொம்ப தூரமோ?
இதோ... பக்கத்துல வந்துட்டோம்.
வீட்டினுள் அமர வைத்து சேவல் கதவை மூட...
ஏன் கதவை மூடற?
ம்... ரத்தம் கேட்டீங்களே அதான்.
என்ன சொல்கிறது?
சேவல் உரத்த குரலில்...
தம்பிகளா... அவங்களுக்கு சீக்கிரமா கொடுத்து அனுப்புங்க!


ஹேய்... எதுக்கு கம்பெல்லாம்?
ம்... ரத்தம் கேட்டீங்களே!
இதோ வாங்கிக்கங்க!
வலிக்குது... வலிக்குது... அடிக்காதீங்க!
ஆமா... எங்களை விட்டுடுங்க.
இன்னும் கொஞ்சம் ரத்தம் வாங்கிக்கங்க.
நரியும் கீரியும் அலறின.
ஐயையோ... வேண்டவே வேண்டாம்.
ஆம்... கேட்கவே மாட்டோம்!
எல்லார் கிட்டயும் ஒழுங்கா இருங்க.
சேவல் எச்சரித்தது.
இனிமே ரத்தம் கித்தம்னு சொன்னீங்க...
மாட்டோம், நாங்களும் சைவத் துக்கு மாறிட் டோம்!
நரியும் கீரியும் ஓடின.



குதூகலம்!

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

**சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032**

எக்ஸலன்ட் எல்டர்

❖ டாக்டர் கு.கணேசன் ❖

ஹலோ, கோகுலம் குட்டீஸ்! நலம்தானே? இந்த மாதம் இதய அமைப்பையும் இதயத் துடிப்பையும் 3டி படம் மாதிரி கம்ப்யூட்டரில் காண்பிக்கிற எக்கோகார்டியோகிராப் எனும் கருவியை யார், எப்படிக் கண்டுபிடிச்சாங்கன்னு பார்ப்போம்.

'கார்ல் ஹெல்முத் ஹெர்ட்ஸ்' என்பவர் சுவீடன்நாட்டில் வாழ்ந்த இயற்பியல் விஞ்ஞானி. இவர் ஜெர்மனியில் ஹம்பர்க் எனும் ஊரில் 1920ம் ஆண்டு அக்டோபர் பதினைந்தாம் நாள் பிறந்தார். இவருடைய தந்தை 'கஸ்டவ் லுட்விக் ஹெர்ட்ஸ்' நோபல் பரிசு பெற்ற பிரபல விஞ்ஞானி.

'ஹெல்முத் ஹெர்ட்ஸ்' இயற்பியலில் பட்டம் பெற்ற சமயம், இரண்டாம் உலகப் போர் நடந்தது. அதனால் நாஜி படையில் இராணுவ வீரனாகச் சேர்ந்தார். போரின்போது அமெரிக்கப் படையிடம் சிக்கிக் கொண்டார். அமெரிக்க இராணுவம் இவரை நாடு கடத்திவிட்டது.

என்றாலும், தந்தையின் செல்வாக்கினால் ஒரு நண்பர் மூலம் விடுவிக்கப்பட்டு, சுவீடன் நாட்டில் குடியமர்த்தப்பட்டார். அங்கு 'லுண்ட் பல்கலைக் கழக'த்தில் பணியில் சேர்ந்தார். அங்கு இவருக்கு 'நுண்ணொலிகள்' பற்றி ஆராய்ச்சி செய்வதில் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது.



நுண்ணொலிகள் என்பவை 'சேளா ஒலி அலைகள்' என்று அழைக்கப்படுகின்றன. அதாவது இந்த ஒலி அலைகளை நம் காதுகளால் கேட்க முடியாது. அதே நேரத்தில் ஒலி அலைகளுக்கு உள்ள எல்லாத் தன்மைகளும் இவற்றுக்கு உண்டு. முக்கியமாக, இந்த ஒலி அலைகள் ஒரு பொருள்மீது மோதினால், எதிரொலித்து மீண்டும் அந்த ஒலி பிறந்த இடத்துக்கே திரும்பிவிடும்.

உதாரணமாக, வௌவால்களுக்கு இருட்டில் கண் தெரியாது. ஆகவே அவை பறக்கும்போது எதிரில் ஏதேனும் தடை உள்ளதா என்பதைத் தெரிந்துகொள்ள, இதுபோன்ற ஒலியை உண்டாக்கிக் காற்றில் அனுப்பும். வழியில் ஏதேனும்

ஹெர்ட்ஸ்!



தடை இருந்தால் ஒலி எதிரொலித்துத் திரும்பும். அதன் தன்மையை உணர்ந்து, வௌவால்கள் திசை மாறிப் பறக்கும்.

ஒலிக்கு உண்டான இந்தத் தனித் தன்மையை அடிப்படையாக வைத்து, 'சோனார்', 'ராடார்' போன்ற கருவிகளை அப்போது கண்டுபிடித்திருந்தனர். 'சோனார்' என்பது கடலுக்கு அடியில் சென்று கொண்டிருக்கும் நீர்மூழ்கிக் கப்பல் எவ்வளவு ஆழத்தில், எவ்வளவு வேகத்தில், எந்தத் திசையில் செல்கிறது என்பதைக் கடலின் மேற்பரப்பிலிருந்தே கண்டுபிடிக்க உதவும் கருவி.

இதுபோல் 'ராடார்' என்பது, ஒரு விமானம் வானத்தில் பறந்து கொண்டிருக்கும்போது, விமான தளத்திலிருந்து அந்த விமானம் எந்தத் திசையில், எவ்வளவு வேகத்தில் பறக்கிறது என்பதையும், அதன் எதிரில் வேறு விமானம் வருகிறதா என்பதையும் தெரிந்து கொள்வதற்காகப் பயன்படும் கருவி.

ஹெர்ட்ஸ், இவை போன்று புதிய கருவி ஒன்றை, கண்டுபிடிக்க வேண்டும் என்ற முயற்சியில் இருந்தார்.



அது 1953ம் ஆண்டு. ஹெர்ட்ஸ் பணிபுரிந்த லுண்ட் பல்கலைக்கழகத்துடன் ஒரு பெரிய மருத்துவமனையும் இணைந்திருந்தது. அதன் இருதயப் பிரிவு தலைவராக 'இன்ஞி எல்டர்' எனும் மருத்துவர் இருந்தார்.

அந்த நேரத்தில் மனித இதயத்தின் குறைபாடுகளை அறிய எக்ஸ்-ரே மட்டுமே இருந்தது. ஆனால் அதன் மூலம் இதய உள்கோளாறுகளைத் துல்லியமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. மனித இதயத்தின் உள்ளே இருக்கும் வால்வுக் கோளாறுகளை வெளியிலிருந்தே தெரிந்துகொள்ள, ராடார், அடைக்கப்பட்டிருக்கும் பெட்டிகளைத் திறக்காமல், சேதப்படுத்தாமல், உள்ளே உள்ள பொருள்களின் தன்மைகளைத் தெரிந்துகொள்ள உதவும் ஒரு கையடக்கக் கருவி.

இவர்கள் ஜெர்மனியிலிருந்து நவீன 'ரெப்லெக்டோஸ்கோப்' ஒன்றை சுவீடனுக்கு வரவழைத்தனர். அந்தக்

மருத்துவ மேதைகள் : ராபர்ட் காக்

'உலக நுண்ணுயிர் இயலின் நிறுவனர்' என்று போற்றப்படுபவர் 'ராபர்ட் காக்' எனும் ஜெர்மானிய மருத்துவர். இவர் 1843ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் நாள் ஹெனோவர் மாவட்டத்தில் கிளாஸ்தால் எனும் ஊரில் பிறந்தார். 'கோட்டிங்கன்' பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பட்டம் பெற்றார். நுண்ணுயிர்க் கிருமியின் காரணமாக நோய் உண்டாகும் விளைவை முதன்முதலில் நிரூபித்தவர் இவர்தான். விலங்குகளுக்கு ஏற்படும் 'ஆந்த்ராக்ஸ்' நோய்க்குக் காரணமான கிருமியை 1876ல் கண்டுபிடித்தவர். அதற்கான தடுப்பூசியையும் இவர்தான் கண்டுபிடித்தார். மக்களுக்குக் காலரா பரவும் விதத்தையும் விளக்கினார். விலங்குகளின் கோமாரி நோய்க்குத் தடுப்பூசி கண்டுபிடித்தார். 1885ல் பெர்லின் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார். அடுத்த ஐந்து

சோனார் போன்று ஒரு கருவியைக் கண்டுபிடித்தால் நல்லது என்ற எண்ணத்தில் இருந்தார் 'இன்ஞி எல்டர்'. இது ஹெர்ட்ஸுக்குத் தெரிய வந்தது. உடனே எல்டருடன் இணைந்து அந்த ஆராய்ச்சியில் இறங்கினார்.

அப்போது ஹெர்ட்ஸின் தந்தை 'ரெப்லெக்டோஸ்கோப்' என்ற கருவியைத் தயாரிப்பதில் புகழ் பெற்றிருந்த 'சீமன்ஸ் கம்பெனி'யின் இயக்குனராக இருந்தார். 'ரெப்லெக்டோஸ்கோப்' என்பது, கருவியிலிருந்து கேளா ஒலி அலைகளை இதயத்துக்கு அனுப்பிப் பரிசோதித்தனர். இதயத்திலிருந்து ஒலி அலைகள் எதிரொலித்துத் திரும்பி வருவதைத் தெரிந்துகொண்டனர்.

அதைத் தொடர்ந்து, இருவரும் இரண்டு ஆண்டுகள் கடுமையாக ஆராய்ச்சி செய்து, 'ரெப்லெக்டோஸ்கோப்'பில் சிற்சில மாற்றங்களைச் செய்து, ஒரு புதிய கருவியைக் கண்டுபிடித்தனர். அதுதான் உலகின் முதல்


'எக்கோகார்டியோகிராப்'. (சுருக்கமாக எக்கோ). இவர்களுக்குப் பிறகு வந்த விஞ்ஞானிகள் இதில் பல மாற்றங்களைச் செய்து இதனை நவீனப்படுத்தினர். இதயம் மட்டுமின்றி, வயிற்று உறுப்புகள், வயிற்றில் வளரும் குழந்தை, ரத்தக் குழாய்கள் போன்றவற்றின் கோளாறு களையும் கண்டுபிடிக்க இக்கருவி இப்போது உதவுகிறது.

சரி, எக்கோகார்டியோகிராப் எப்படி வேலை செய்கிறது தெரியுமா?

இக்கருவி பார்ப்பதற்கு ஒரு 'மினி ஃபிரிஜ்' போன்று இருக்கும். அதில் 'டிரான்ஸ்டூசர்' எனும் கருவி இணைக்கப்பட்டிருக்கும். இதுதான் ஒலி அலைகளை உற்பத்தி செய்து உட லுக்குள் அனுப்புகிறது. அந்த ஒலி அலைகள் உடலுக்குள் தங்கு தடையின்றி நுழைவதற்காக, பரிசோதிக்கும் நபரின் உடலில் ஒரு பசையைத் தடவுவார்கள் மருத்துவர்கள். பின்பு அதன் வழியாக ஒலி அலைகளை அனுப்புவார்கள். அவை உடல் உறுப்புகளில் மோதி எதிரொலித்து வருவதை, 'டிரான்ஸ் டூசர்' உள்வாங்கி, கம்ப்யூட்டரில் பதிவு செய்யும். அங்கு அவை 3டி படங்களாக மாறும். அப்படங்களில், உடல் உறுப்புகளில் ஏற் பட்டுள்ள கோளாறுகள், நோய் பாதிப்புகள் போன்றவை தெளிவாகத் தெரியும். அதற்கேற்ப மருத்துவர்கள் சிகிச்சை தருவார்கள்.

புரிந்ததா, குட்டீஸ்? இனி அடுத்த மாதம் இன்னொரு புதிய கண்டுபிடிப்பைத் தெரிஞ்சுக்குவோம். பை!

ஆண்டுகளில், குழந்தைகளுக்கு வரும் காசநோயை ஆரம்ப வயதிலேயே கண்டுபிடிப்பதற்கு 'டுபர்குளின்' என்னும் தோல் பரிசோதனையை அறிமுகப்படுத்தினார். இவர் இந்தியாவுக்கு வந்து பிளேக் நோய்க் காண ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இவர் பெர்லினில் தொற்று நோய்களுக்காகவே ஒரு தனி மருத்துவமனையையும் ஆராய்ச்சி நிறுவனத்தையும் தொடங்கினார். நோய்க்கூறு இயலின் அடிப்படைக் கோட்பாடுகளை அறிவித்தவரும் இவரே. காச நோய்க் கிருமிகளைக் கண்டுபிடித்ததற்காக, 1905ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு இவருக்குக் கிடைத்தது.



● ராபர்ட் காக்

சிறுகதை

காட்டிலிருந்த மான்கள் எல்லாம் அழகி மான் வீட்டுக்குத் திரண்டு வந்தன. அழகி மான் ஏதோ புதிய பொருள் ஒன்றை வைத்திருப்பதாக வதந்தி. அவர்கள் போனபோது தூங்கிக் கொண்டிருந்த அழகி மான், சத்தம் கேட்டு விழித்தது.

''என்ன விஷயம்? கூட்டமாய் வந்



❖ எஸ்.ஜூலியட் மரிய லில்லி ❖

அழகி மானின் செல்ஃபோன்!

திருக்கிறீர்களே...'' என்றது சோம்பலாய்.

''நீ ஏதோ புதிய பொருள் வைத்திருக்கிறாயாமே. அதைப் பார்க்கத்தான் வந்திருக்கிறோம்'' என்றது தலைவர் மான்.

அழகி மான் அலுத்துக் கொண்டது.

''ஓ... எத்தனை பேரிடம் காட்டுவது? அதைப் பற்றி உங்கள் யாருக்கும் தெரியாது.''



''இருக்கட்டுமே. நாங்கள் பார்க்க வேண்டும். காட்டு.'' கிழமான் கெஞ்சியது.

அழகி மான் தன் கையிலிருந்ததைக் காட்டியது. மற்ற மான்கள் வியப்புடன் பார்த்தன.

தலைவர் மான் அதைத் தொடாமலே, ''இது என்ன. மரப்பலகையா? செங்கல் துண்டா...?'' என்றது.

''ஏதோதின்பண்டம்போலிருக்கிறது'' என்றது ஒரு குட்டி மான்.

அழகி மான் சிரித்தபடி, ''இதுதான் செல்ஃபோன். இதன்மூலம் அடுத்த காட்டுக்கும் பேசலாம்'' என்றது.

''அடுத்த காட்டுக்கா? இரண்டு நாள் பிரயாணம் செய்துதான் அங்கிருப்பவர்களிடம் பேச முடியும். என்ன விளையாடுகிறாய்?'' தலைவர் மான் கோபப்பட்டது.

''அதெல்லாம் அந்தக் காலம். இது புதிதாய் வந்திருக்கிற கருவி. இதை ஆன் செய்து பக்கத்துக் காட்டுக்குப் பேச முடியும்.'' விளக்கியது அழகி மான்.

''இதனால் என்ன பயன்?'' கிழ மானுக்குப் பயம் விலகவில்லை.

''புதுசு புதுசா நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். எல்லா விஷயங்களையும் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்'' என்றது அழகி.

''எங்களால் நம்ப முடியாது'' என்றது குட்டிமான்.

''சரி. இப்போது இதில் பேசிக் காட்டுகிறேன். எல்லோரும் கேளுங்க.''

எல்லா மான்களும் அமைதியாக உட்கார்ந்தன. அழகி மான் ரொம்ப ஸ்டைலாக செல்லை அழுத்தி, கைபோன வாக்கில் நம்பரைப் போட்டது.

எதிர்முனையில் ரீங் போனது. செல்லை 'மைக்'கில் போட்டுவிட்டு பேச ஆரம்பித்தது அழகி மான்.

''நான் பச்சை மலைக்காட்டிலிருந்து பேசறேன். நீங்க எங்கேயிருந்து பேசறீங்க?''

''நான் நீலமலைக் காட்டிலிருந்து பேசறேன்.''

மற்ற மான்கள் அதிசயமாய் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன.

அழகி மான் பெருமையாய்த் தொடர்ந்தது.

''நான் உங்களுக்கு நண்பனா இருக்க ஆசைப்படறேன். உங்களுக்கு விருப்பமா?''

''தாராளமா. நீங்க பார்க்க எப்படி இருப்பீங்க?''

''ரொம்ப அழகா இருப்பேன்.'' இதை அழகி மான் கர்வமாய்ச் சொன்னது குட்டிமான் பெருமூச்சுவிட்டது.

''ஓ... உங்க சருமம் எப்படியிருக்கும்?'' எதிர்முனை ஆர்வமாய் கேட்டது.

''ரொம்ப ரொம்ப மென்மையா இருக்கும்.''

''ஒல்லியா இருப்பீங்களா?''

''சேச்சே... கொழுகொழுன்னு இருப்பேன்.''

''உங்களுக்குச் சொந்தக்காரங்க...?''

''நிறைய பேரு இருக்கோம்.'' அழகி மான் சொன்னதும், எல்லா மான்களும் திருப்தியாய்த் தலையாட்டின.



''அப்படின்னா உங்க காட்டுக்கு நான் அவசியம் வரணும். உடனே கிளம்பறேன்.'' எதிர் முனை சொன்னது.

அழகி மான் அலட்சியமாய், ''நீங்க யாருன்னு சொல்லலியே?'' என்றது.

மான் கூட்டம் பரபரப்பானது. எதிர் முனையிலிருந்து பதில் வந்தது.

''நான்தான் சிங்கம். ஆமா நீங்க யாரு?''

அதைக் கேட்டதும் மற்ற மான்கள் எல்லாம் ஒரு நொடியில் மாயமாய் மறைந்தன. சிங்கம் ''ஹலோ... ஹலோ'' என்று கத்தியபடி இருக்க, அழகி மான் நடுக்கத்தை மறைத்தபடி, ''ஹலோ... நான்தான் முள்ளம்பன்றி'' என்று சொல்லிவிட்டு, செல்ஃபோனைத் தூக்கிப் போட்டுவிட்டு கூட்டத்தாரைத் தேடி ஓடியது.



கோகுலம்
எக்ஸ்பிரஸ்

உள்ளே...



II. 1.பிடிவாதம் பிடிக்கும் ஊர் எது?

2. உடுத்திக் கொள்ள முடியாத டிரஸ் எது?

3. திருடனுக்கு பிடித்த ராகம் எது?

4. சலூன் கடைகாரருக்கு பிடித்த காய்கறி எது?

- ச.கனிமொழி, ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக்குலேஷன் பள்ளி,
செஞ்சி

பிடிவாதம் பிடிக்கும் ஊர்?



I. 1. கையில்லாமல் நீந்துவான்; கால் இல்லாமல் ஓடுவான். அவன் யார்?

2. பட்டை உண்டு கட்டை இல்லை; இலையுண்டு கிளையில்லை; பூ உண்டு மணமில்லை; பழம் உண்டு விதையில்லை; கன்று உண்டு; மாடு இல்லை. அது என்ன?

3. முதலில் ஒலிப்பான்; பிறகு உரைப்பான். அவன் யார்?

4. ஒரு பாட்டில்; இரண்டு தைலங்கள். அது என்ன?

- கு.புவனேஸ்வரி,
ஆறாம் வகுப்பு, ஏவி.எம். மாரிமுத்து
நாடார் மே.நி. பள்ளி, சிவகாசி

விடுகதைகள்





IV. 1. அழைப் பான்; ஆனால் காலிங் பெல் அல்ல; எங்கு போனாலும் பேச உதவும்; ஆனால் தொலை பேசி அல்ல - அது என்ன?

2. மழையில் நனையாத காய் எது?

3. எரிய வைப்பான்; ஆனால் அவன் எரியமாட்டான் - அவன் யார்?

- ரா.செ.அகல்யா,
ஐந்தாம் வகுப்பு,
ஸ்ரீ காஞ்சி சங்கர வித்யாலயா,
மயிலாடுதுறை

III. 1. ஏழை படுக்கும் பாய்; எடுத்து சுருட்ட ஆளில்லை - அது என்ன?

2. நிலத்திலே முளைக்காத புல். அது நிமிர்ந்து நிற்காத புல் - அது என்ன?

3. காது பெரிது, கேளாது; வாய் பெரிது பேசாது; வயிறு பெரிது; உண்ணாது - அது என்ன?

- ரெ.சஹானா, ஏழாம் வகுப்பு,
புனித சின்னப்பர் மகளிர்
மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை



விடைகள் :

I. 1.படகு, 2.வாழை, 3.தொலைபேசி, 4.முட்டை

II. 1.'சண்டி'கர், 2.அட்ரஸ், 3.சுருட்டி, 4.கத்திரிக்காய்

III. 1.பூமி, 2.கண் இமை, 3.அண்டா

IV. 1.வாய், 2.குடை மிளகாய், 3.சூரியன்

✱ உலகக் கோப்பை கிரிக்கெட் வரலாற்றில் முதல் முதலாக நடந்த போட்டியின் முதல் பந்தை வீசியவர் இந்திய வீரர் மதன்லால் - 1974ம் ஆண்டு.

✱ டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் தொடர்ந்து 5 முறை ரன் எடுக்காமல் அவுட் ஆனவர் இந்தியாவின் அஜித் அகர்கர்.

✱ அதிகமான கிரிக்கெட் வீரர்களை ரன் எடுக்கவிடாமல் அவுட் ஆக்கிய பௌலர் நியூசிலாந்து வீரர் ரிச்சர்ட் ஹாட்லி. இவர் 66 வீரர்களை முட்டைபோட வைத்துள்ளார்.

✱ முதல் உலகக் கோப்பை ஆட்டத்தில் முதலில் ஆடிய நாடுகள் இந்தியா, இங்கிலாந்து.







அதிக விக்கெட்!

✱ உலகக் கோப்பை வரலாற்றில், மூன்றாவது (ரீப்ளே) அம்பயர் மூலம் அவுட்டான முதல் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர்.



✱ உலகளவில் அதிக விக்கெட் வீழ்த்திய மூன்றாவது பௌலர்; ஒரு இன்னிங்ஸில் பத்து விக்கெட்டுகளையும் வீழ்த்தியவர் என்கிற பெருமைக்குரியவர் இந்திய கிரிக்கெட் வீரர் அனில் கும்ளே.


✱ ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் தொடக்கத்திலிருந்தே அதிரடியாக

அடித்து விளையாடி ரன் குவிக்கும் புதிய உத்தியை முதலில் செய்தவர் இலங்கை வீரர் ஜெய்சூரியா.

✱ 1987ல் உலகக் கோப்பையை வென்றது மட்டுமல்ல; 1999, 2003, 2007 என்று தொடர்ந்து மூன்று முறை உலகக் கோப்பையை வென்று சாதனை படைத்தது ஆஸ்திரேலிய அணி.

- த.பாரத், ஆறாம் வகுப்பு,
உறுப்பினர் எண் : 576,
யாகப்பா பள்ளி, தஞ்சாவூர்

மகாத்மா என்றவர்...





✱ காந்திக்கு மகாத்மா என்று பட்டமளித்தவர் **இரவிந்திரநாத் தாகூர்.**


✱ உலகில் மிக குறைந்த பாடல் வரிகளை கொண்ட தேசிய கீதம் **ஜப்பான் தேசிய கீதம். (4 வரிகள்).**

✱ உலகில் **2792** மொழிகள் பேசப்படுகின்றன.

✱ இந்தியத் திரையுலகில் வழங்கப்படும் மிக உயரிய விருது **தாதா சாகேப் பால்கே விருது.**

✱ புக்கர் பரிசு பெற்ற முதல் இந்திய எழுத்தாளர் **அருந்ததிராய்.**

- செ.மணிகண்டன், எட்டாம் வகுப்பு, சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி, செஞ்சி



✸ சின்னம்மை நோயை உண்டாக்கும் வைரஸ் **வரிசெல்லா.**

✸ குளிர்சாதனப் பெட்டியில் பயன்படுத்தப்படும் திரவம் **அமோனியா, போரான்.**



✸ சூரியனின் உட்பகுதிக்கு கொடுக்கப்பட்ட பெயர் **தெர்மோஸ்பியர்.**

✸ சீர்காழியின் பழைய பெயர் **கழுமலம்.**

✸ அதிக மருத்துவமனைகள் கொண்ட நாடு **சீனா**

✸ மின்சாரத்தின் அலகு **கூலூம்**

✸ பி.ஹெச்டி. பட்டம் பெற்றிருந்த அமெரிக்க அதிபர் **உட்ரோ வில்சன்**

✸ இந்தியாவின் உயர்ந்த இலக்கிய விருது **ஞானபீடம்**

✸ யுனைடெட் பிரஸ் இண்டர்நேஷனல் நிறுவன தலைமையகம் உள்ள இடம் **நியூயார்க்.**

✸ இந்தியாவின் வைர நிறுவனம் அமைந்துள்ள நகரம் **சூரத்.**

✸ அரபிக் கடலின் அரசி என்று அழைக்கப்படுவது **கொச்சி நகரம்.**

- கே.ஸ்ரீமதி,
ஏழாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்






அரபிக் கடலின் அரசி!

வண்ணம் தீட்டுங்கள்!

இங்குள்ள
படத்தை
உங்கள்
கைவண்ணத்தால்
அழகுபடுத்துங்க
குட்டீஸ்!



ஓவியம் :
கு.நித்யானந்தன்,
கொடாப்பு
கிராமம்



விழுதாய் பரவுவோம்!

– கே.பி.பத்மநாபன்

மாரி என்றே கோயிலிலும்
மசூதி சென்றே தொழுவதிலும்
மேரி என்றே துதிப்பதிலும்
மெய்யாய் இருப்பது அன்பேதான்.
பாரில் எல்லா உயிருக்கும்
படைப்பில் சமமாய்ப் பங்குண்டு.

வேரில் வெந்நீர் ஊற்றாமல்
விழுதாய்ப் பரவி வாழ்ந்திடுவோம்!

காகம் குருவி கோழியெலாம்
கடவுள் பெயரால் மோதிடுமோ?
வேகம் கொள்ளும் மதயானை
வெறியாய் 'மதத்'தைக் கொள்வதில்லை;
நாகம் கொண்ட நஞ்செல்லாம்
நமது வெறிக்கும் கீழென்றால்
சோகம் அன்றோ நம்வாழ்வு?
சொல்லால், செயலால் ஒன்றிடுவோம்!

அன்பு பாசம் நிறைந்திட்ட
அன்னை வயிற்றில் பிறந்திட்டோம்!
அன்னை தந்தை ஆசிரியர்
அறவுரை கேட்டு வளர்ந்திட்டோம்;
நன்றாய் அன்பில் தோய்ந்திட்டும்
நம்து நெஞ்சில் பகையேனோ?
இன்றே நாமும் சிந்தித்தால்
இனிமேல் நேயப் பூங்காதான்!

பாட்டுப் பாடுங்க!

– இளம் விழியன்

தவளையாரே! தவளையாரே!
தத்தி வருகுவீர்!
குவளை நிறைய நீரிருக்கு
குளித்துப் போகுவீர்!

முன்னிரண்டு காலெடுத்து
வணக்கம் சொல்லுவீர்!
பின்னிரண்டு காலெடுத்து
தத்திச் செல்லுவீர்

வாத்தியமும் வாசிக்கவே
வந்து சேரணும்!
நேர்த்தியுடன் கச்சேரியை
நானும் கேட்கணும்!

பொன்னைப் போல...

– சி. விநாயகமூர்த்தி



மேனி தீய்ந்து கரையும் வரையும்
மெழுகு வர்த்தி ஒளிரும்
வானின் மேகம் தான்கரைந்து
மழை பொழிந்து உதவும்

தேய்ந்து தேய்ந்து தேகம் தீர்ந்தும்
கமழும் சந்தனம்போல்
தோய்ந்து, தோய்ந்து தியாகப் பண்பில்
திளைக்க வேண்டும் நாமும்!

வீழ்ந்து தீயில் வெந்த பின்னும்
மின்னும் பொன்னைப் போல
ஆழ்ந்து நாமும் அன்பில் மூழ்கி
நன்மை செய்ய வேண்டும்


நாடும் வீடும் உயர்வு காண
நாடு தியாக நெறியை
ஏடு பயிலும் இளைய வயதில்
இதயம் கொள்க இதனை!



குட்டை, குளம் உந்தன் கீதம்
கேட்டு மகிழுதே!
எட்டுக்கட்டை ராகத்திலே
நெஞ்சம் நெகிழுதே!

காசுபணம் ஏதும்நீங்க
கேட்க வேண்டாங்க!
பாசத்தோட வந்து ஒரு
பாட்டுப் பாடுங்க!

பின்னோக்கிப் பறக்கும் பறவை!



✱ பென்சில் தயாரிக்க காரியம், களிமண், மரக்கூழ் ஆகியவை தேவைப்படுகின்றன.

✱ பின்நோக்கிப் பறக்கக் கூடிய ஒரே பறவை ஹம்மிங் பறவை.

✱ பிரஷர் குக்கரைக் கண்டுபிடித்தவர் டெனிஸ் பாபின்.

✱ அச்சு இயந்திரத்தை அறிமுகப்படுத்தியவர் காக்ச்டன்.

✱ செஸ் விளையாடும் கம்ப்யூட்டரின் பெயர் டீப் புளூ.



✱ இந்தியாவில் தும்பா ராக்கெட் நிலையம் கேரளாவில் உள்ளது.

✱ சந்திரனின் புவி ஈர்ப்புச் சக்தி பூமியின் புவிஈர்ப்பு சக்தியில் ஆறில் ஒரு பங்கு.

✱ கிரிக்கெட்டில் சிக்ஸர் 1910ஆம் ஆண்டு அறிமுகமானது.

✱ பால்பாயிண்ட் பேனாவை டைரோ சகோதரர்கள் கண்டுபிடித்தனர்.

✱ நம் உடலில் உள்ள தசைகளின் எண்ணிக்கை 630.

✱ தேனீக்களுக்கு நான்கு கண்கள் உள்ளன.

✱ தோலினால் சுவாசிக்கும் உயிரினம் மண் புழு.




✱ உலகில் கடுங்குளிரான இடம் ரஷியாவில் உள்ள வெர்கயான்ஸ்க்.

- பா.சுதர்ஸன், உ. எண் : 624,
குட் ஷெப்பர்ட் மெட்ரிக் மேல்நிலைப்
பள்ளி, திருச்சி









சிரித்தால் 14...

✱ நமது உடலிலுள்ள தசைகளில் மிக வலிமையான தசை நாக்கு.

✱ நமது உடலில் உதடுகள் மட்டும் வியர்ப்பதில்லை


✱ நாம் உண்ணும் உணவுடன் நமது உமிழ்நீர் சேர்ந்தால் மட்டுமே உணவின் சுவையை அறிய முடியும்.

✱ நாம் புன்னகைக்கும் போது 14 தசைகளும், கோபப் படும்போது 43 தசைகளும் இயங்குகின்றன.

✱ மனிதர்களின் உடலில் உள்ள இரத்தக் குழாய்களின் மொத்த நீளம் 6000 மைல்கள்

- ச.ரவிசங்கர்,
பதினொராம் வகுப்பு,
ஜி.டி.மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி, கோவை





மம்தா மணிமாறன்,
உ. எண் : 121, நான்காம் வகுப்பு,
பாலகிருஷ்ணா மெட்ரிக் பள்ளி,
வடக்கன்குளம்



ஏ.ஹம்சத் தவ்ஹா, உ. எண் : 277,
மூன்றாம் வகுப்பு, ஹமீதியா மெட்ரிக்
மேநிலைப்பள்ளி, கீழக்கரை

மனிஷா மணிமாறன்,
உ. எண் : 87, எட்டாம் வகுப்பு,
பாலகிருஷ்ணா
மெட்ரிக் பள்ளி,
வடக்கன்குளம்



உங்கள் கைவண்ணம்!



பி.சந்திரகலா,
ஒன்பதாம் வகுப்பு, சாரதா மெட்ரிக். பள்ளி, செந்தி



எம்.எஸ்.கௌரி சங்கரி,
எட்டாம் வகுப்பு, குட்ஷெப்பர்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம்



ச.ப்ரீத்தி,
ஏழாம் வகுப்பு, புனித வளனார் மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி, மதுரை

மன்னன் வீரசேனன் பெரும் வள்ளலாக விளங்கினான். இதனால் எப்பொழுதும் அவனை புலவர்கள் சூழ்ந்து இருந்தனர்.

அவனும் தனக்கு ஏற்படும் ஐயங்களைப் புலவர்களிடம் கேட்டு, தெளிவு பெறுவான்.

ஒருநாள், வழக்கம்போலப் புலவர்கள் அவனைச் சூழ்ந்து இருந்தனர்.

"புலவர்களே! எனக்கு ஒரு ஐயம். உடலின் எல்லாப் பகுதிகளிலும் முடி வளர்ந்திருக்கிறது. ஆனால் உள்ளங்

கெட்டிக்காரப் புலவர்!



குட்டிக்கதை

கையில் மட்டும் முடியே இல்லை. இதற்கு என்ன காரணம்? யாராவது சொல்லுங்கள்'' என்று கேட்டான் அவன்.

சரியானவிடையளிக்கத்தோன்றாமல் பலரும் அமைதியாக இருந்தனர்.

அப்போது, புலவர் நல்லதம்பி எழுந்து சொன்னார். ''அரசே! நீங்கள் வருபவர்களுக்கு வாரி வாரி வழங்குகிறீர்கள். எப்பொழுதும் கொடுத்துக் கொண்டே இருப்பதால், உங்கள் உள்ளங்கையில் முடி முளைக்கவில்லை''.

மன்னன் அவரை மடக்க நினைத்தான்.

''புலவரே! என் உள்ளங்கையில் முடி முளைக்காததற்கு தாங்கள் சொல்லும் காரணத்தை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் புலவர்களாகிய உங்கள் உள்ளங்கைகளிலும் முடி முளைக்கவில்லையே. இதற்கு என்ன காரணம்?'' என்று கேட்டான்.



''அரசே! உங்களிடமிருந்து நாங்கள் எப்பொழுதும் பரிசு வாங்கிக் கொண்டே இருக்கிறோம். பரிசு வாங்கி வாங்கி எங்கள் உள்ளங் கையிலும் முடி முளைக்கவில்லை'' என்றார் புலவர்.

சாமர்த்தியமான அந்த பதிலைக் கேட்டு மகிழ்ந்த மன்னன், ''நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறேன். வேறு யார் கையிலுமே முடி முளைக்கவில்லையே'' என்றான் மீண்டும்.

''அரசே! மற்ற அரசர்கள் தங்களைப் போல் வாரி வழங்க முடியவில்லையே என்ற பொறாமையால் தங்கள் கைகளைப் பிசைந்து கொள்கிறார்கள். அதேபோல, உங்கள் கைகளால் பரிசு பெறாத மக்களும், கைகளைப் பிசைந்து கொள்கிறார்கள். அதனால்தான் அவர்கள் கையிலும் முடி முளைக்கவில்லை. எல்லோர் உள்ளங்கையிலும் முடி இல்லாததற்கு இதுவே காரணம்'' என்று விளக்கம் தந்தார் புலவர் நல்லதம்பி.

''அபாரம் புலவரே! காரணம் வேறாக இருந்தாலும், உம் சாமர்த்தியமான பதில்களைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தேன். என் அன்புப் பரிசை ஏற்றுக் கொள்ளும்'' என்று முத்துமாலையை அளித்தான் வீரசேனன்.

மற்ற அரசர்கள் உங்களைப்போல் வாரி வழங்க முடியவில்லையே என்ற பொறாமையால் தங்கள் கைகளை பிசைந்துகொள்கிறார்கள்

- சு.தணிகைவேல், பதினொராம் வகுப்பு, சே.சா.மு.ந.மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்

பறவைகளின் சராசரி ஆயுள்காலம் ஆண்டுகளில்...

கழுகு	72	வான்கோழி	12
ஆந்தை	68	வௌவால்	10
கிளி	50	வானம்பாடி	8
மயில்	20	நெருப்புக்கோழி	50
புறா	20		

- அனீஸ் ஃபாத்திமா, உறுப்பினர் எண் : 34, பதினொராம் வகுப்பு, சிசம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, போடிநாயக்கனூர்





கிளிக்கு 50 வயது!



I. ஒரு ஸ்டேஷனரி கடையில் ஸ்கேல் ஒன்றின் விலை ரூ.2. பென்சிலின் விலை ரூ.1. ரப்பரின் விலை 50 காசுகள். கடைக்குச் சென்ற ஒருவர் மொத்தப் பொருட்களை ரூ.50 கொடுத்து வாங்கினார். அவர் வாங்கிய பொருட்களின் மொத்த எண்ணிக்கையும் 50ஆக இருந்ததுடன், மூன்று பொருட்களில் ஏதேனும் இரு பொருட்களின் எண்ணிக்கையும் சம அளவில் இருந்தன. ஒவ்வொன்றிலும் அவர் வாங்கிய பொருட்கள் எவ்வளவு என்று



சோகத்தைக் குறிக்கும் ராகம்?



கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

- ஆர்.கணேசன், சேலம்

II. அடைப்புக் குறிக்குள் பொருத்தமான எழுத்துக்களை சேர்த்தால் முதல் வார்த்தை முடியும், இரண்டாவது வார்த்தை ஆரம்பமாகும். அது என்னவென்று கண்டுபிடிங்கள்.

1. ஒட்ட (--) மல்
2. நாழி (-) ரேகை
3. அதி (--) கம்
4. ஆடம் (---) பரை
5. திப்பி (-) கிதம்

புதிர்கள்

6. அட்ச(--)பம்
7. கோது (-)யல்
8. கரு(-)டை
9. பிரத(--)மம்
10. சிங்(--)பம்

- என்.லோகேஷ்வர்,
உறுப்பினர் எண் : 586,
பெத்தி செமினேர்
மேல்நிலைப்பள்ளி, புதுச்சேரி

III. கீழ்கண்ட 10 கேள்விகளுக்கும் பதில்களின் முடிவு எழுத்து 'ரி'. எங்கே பதிலைக் கூறுங்கள் பார்க்கலாம்.



1. குள்ளமான மனிதர்களை உரு வாக்கும் சுரப்பி...................

2. சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரி ....

3. இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே எல்லைக் கோடாக அமைந்துள்ள கிராமம் ....

4. சோகத்தைக் குறிக்கும் ராகம்............

5. இருமுறை நோபல் பரிசு பெற்ற பெண் விஞ்ஞானி ....

6. சூரியனை ஒருமுறை சுற்றி வர குறைந்த நேரம் எடுத்துக் கொள்ளும் கோள் ....

7. தென்னிந்தியாவில் கல்வி யறிவில் முதலிடம் பெறும் மாவட்டம் ....

8. தண்டியாத்திரை எதை எதிர்த்து நடத்தப் பட்டது? ....

9. பாரதியார் குறிப்பிடும் குயில்தோப்பு உள்ள இடம்...

10. 'வந்தே மாதரம்' பாடலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்...

- கி.பாலாஜி, நான்காம் வகுப்பு,
உறுப்பினர் எண் : 657, ராஜ் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை

விடைகள் : 56-ஆம் பக்கம்

முக்கிய தினங்கள்!

மே 1 - உலக தொழிலாளர் தினம் என்று நாம் கேள்விப் பட்டிருக்கிறோம். அதைப் போன்றே, நண்பர்கள் தினம், தாய்மார்கள் தினம் என்று ஒவ்வொரு தினத்தை குறிப் பிடுவார்கள். இதோ சில முக்கிய தினங்கள்...

ஜனவரி 31 - உலக தொழுநோய் ஒழிப்பு தினம்

பிப்ரவரி 28 - தேசிய அறிவியல் தினம்

மார்ச் 4 - தேசிய பாதுகாப்பு தினம்

ஏப்ரல் 7 - உலக சுகாதார தினம்

ஏப்ரல் 22 - உலக பூமி தினம்

மே 3 - அனைத்துலக ஆற்றல் தினம்

மே 31 - புகையிலை இல்லாத தினம்

ஜூன் 5 - உலக சுற்றுச் சூழல் தினம்

நவம்பர் 14 - உலக நீரிழிவு தினம்

டிசம்பர் 1 - உலக எய்ட்ஸ் தினம்

டிசம்பர் 10 - மனித உரிமைகள் தினம்

டிசம்பர் 14 - தேசிய ஆற்றல் பாதுகாப்பு தினம்

சரணாலயங்கள்!






பொது அறிவு

இந்தியாவில் பறவைகள் மற்றும் விலங்குகளை பராமரிப்பதற்கான சரணாலயங்கள் பல உள்ளன.

- வேடந்தாங்கல் தமிழகத்தில் உள்ள புகழ்பெற்ற பறவைகள் சரணாலயம்.
- இராஜஸ்தானில் உள்ள கானா பறவைகள் சரணாலயம் மற்றும் ஹரியானாவில் உள்ள சுல்தான்பூர் சரணாலயம் ஆகியவற்றில் சுமார் 300 வகைப் பறவைகள் உள்ளன.
- குஜராத்தில் நால்சரோவர் பறவைகள் சரணாலயம் உள்ளது.
- தமிழகத்தில் முதுமலை வன விலங்கு சரணாலயம் உள்ளது.
- மேற்கு வங்காளத்தில் ஜால் டாபாரா சரணாலயம் உள்ளது.

- சு.துர்கா தேவி, பத்தாம் வகுப்பு, வேளாங்கண்ணி மாதா மேல்நிலைப் பள்ளி, சிவகாசி









இன்னொரு கால் எங்கே?

மு.சாய்பிரபு, ஒன்பதாம் வகுப்பு,
பொன்னையா ராமஜெயம்
பொது மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்
படம் : **பிள்ளை**





கொக்கின் ஒரு காலை எடுத்துச் சாப்பிட்டான்.
அடடா... என்ன ருசி
அடுத்த நிமிடமே...
ஆ... மன்னர் கேட்பாரே... என்ன செய்வது.
சாப்பிட வந்த அக்பர்...
இன்னொரு கால் எங்கே?
பயந்த சமையல்காரன்...
... ஒரு கால்தான் இருந்தது.
நீ பொய் சொல்கிறாய்.
நாளை அதை நிரூபிக்க வேண்டும்.
இல்லை அரசே! உண்மைதான்!
கோபமாய் சென்றார் அக்பர்.
பீர்பாலை நாடினான் சமையல்காரன்.
ஐயா... நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்.
சரி; நான் சொல்கிறபடி செய்.
வேலைக்காரனின் காதில் சொன்னார் பீர்பால்.


மறுநாள் காலை அக்பரிடம்...
அரசே... என்னுடன் வாருங்கள்.
பீர்பாலும் உடன் சென்றார்.
வயல்வெளியில் கொக்குகள் நின்றிருந்தன.
அதோ பாருங்கள் கொக்குகளை. ஒரு கால்தான்.
அக்பர் கல்லை எடுத்து வீசினார்.
ச்சூ.
கொக்குகள் எழும்பிப் பறந்தன.
இப்போது பார் இரண்டு கால்களை...
உண்மை தான் மன்னா, ஆனால்...
நேற்றும் நீங்கள் விரட்டியிருந்தால் கொக்கு இன்னொரு காலை காட்டியிருக்கும்.
என்ன?!
பீர்பாலைப் பார்த்துச் சிரித்து...
ஹாஹா... பீர்பால், இது உன் யோசனைதானா?

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

இரண்டு படங்களுக்கிடையே உள்ள ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!



விடை 56ஆம் பக்கம்





பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரையிலுள்ள இளம் சாதனையாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதியிது! விளையாட்டு, பேச்சு, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்துகொண்டு பரிசு பெற்றிருந்தால் அது குறித்த விவரங்கள், புகைப்படம், சான்றிதழின் நகல் ஆகியவற்றை அனுப்புங்கள். சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார்பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு அளிக்கப்படும்.

மறக்காமல் பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். முக்கியமான நிபந்தனை அந்தச் சாதனை, கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப்பட்டதாக இருக்க வேண்டும். பழையது வேண்டாம்!

அனுப்ப வேண்டிய முகவரி :
கோகுலம், சாதனைத் தளிர்கள்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.


சூப்பர் சிவரஞ்சனி!

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் ஸ்ரீ மகாதேவ குருஜி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் இரண்டாம் வகுப்பு பயிலும் மாணவி டி.எம்.சிவரஞ்சினி. இவர் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இருந்து ஒலிபரப்பாகும் வேரித்தாஸ் வானொலி நடத்திய பொது அறிவுப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றுள்ளார். மாணவி டி.எம். சிவரஞ்சினி மேலும் வெற்றிகளை குவிக்க வாழ்த்துவோம்.


வேரித்தாஸ் ஆசிய வானொலி



சாதனைத் தளிர்கள்


REPUBLIC DAY GAMES
2007-2008



சபாஷ் கமலேஷ்!

காஞ்சிபுரம் மாவட்டம் மலைப்பட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பில் பயிலும் மாணவர் எம்.கமலேஷ்குமார். இவர் மாவட்ட அளவில் நடைபெற்ற குடியரசு தினவிழா விளையாட்டு போட்டியில் பதினான்கு வயதுக்குக் குறைவானவர்கள் விளையாடும் பிரிவில், பங்கேற்று வெற்றி பெற்றுள்ளார். இவர் அடுத் தடுத்து பல வெற்றிகளை அடையப் பாராட்டிக் கைகுலுக்குவோம்.

கோவில்பட்டி, பாண்டவர் மங் களம் நாடார் மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர் மு.மாரிமுத்து. இவர் கொண்டையராஜு கலை மற்றும் பண்பாட்டுக் கல்வி அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற

பலே மாரிமுத்து!

ஓவியப் போட்டி, தேசிய நூலக வார விழாவில் மாரத்தான் ஐந்து கி.மீ. ஓட்டப்பந்தயம், பெற்றோர் ஆசிரியர் கழகம் சார்பில் நடை பெற்ற கவிதைப் போட்டி... என பல துறைகளிலும் கலந்து கொண்டு பரிசு பெற்றிருக்கிறார். அவர் மேலும் பல பரிசுகளைப் பெற வாழ்த்துவோம்.


கோவில்பட்டி கல்வி மாவட்டம்
பெற்றோர் ஆசிரியர் கழகம்
போட்டிகள் 2007 - 2008
கவிதை
(உயர்நிலை)
மு. மாரிமுத்து.
மூன்றாம்.



யானையின் துதிக்கையில் எலும்புகள் கிடையாது. நின்று கொண்டே தூங்கக் கூடிய யானை, 4 டன் வரை தூக்கும்.

ஒரே இடத்தில் 8 மணி நேரம்கூட நிற்கும். யானைக்கு நுகரும் சக்தி அதன் வாயில் உள்ளது. இவ்வளவு பெரிய உருவமாக இருந்தாலும் யானை நடக்கும்போது சத்தமே வராது.

- எஸ்.அஸ்வினி,
உறுப்பினர் எண் : 297,
மதுரை





நேர்மை தவறாமையை கதிரவனிடம் கற்றுக் கொள். காலம் தவறாமையை இரவு பகலிடம் கற்றுக்கொள். விடாமுயற்சியை கடல் அலைகளிடம் கற்றுக்கொள். புன்சிரிப்பை பூக்களிடம் கற்றுக்கொள். சுறுசுறுப்பை எறும்புகளிடம் கற்றுக்கொள். சேமிப்பை தேனீக்களிடம் கற்றுக்கொள். ஒற்றுமையை காக்கைகளிடம் கற்றுக்கொள்.

- கி.பாலாஜி, உறுப்பினர் எண் : 657,
மயிலாடுதுறை

- கொக்கு தலையில் வெண்ணெய் வைத்தது போல!
- காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு!
- உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகாது!
- கிளியை வளர்த்து பூனையிடம் தந்தது போல!
- கோழி மிதித்து குஞ்சு முடமாகுமா?

- இராம.ஹரிணி, நான்காம் வகுப்பு, ஸ்ரீ இராமகிருஷ்ண நர்சரிப் பள்ளி, எரகுடி

உறுப்பினர் பக்கம்

ஈரமான சிமெண்ட்!





✱ அறிவைவிட கற்பனையே மிக முக்கியமானது. அறிவு ஓர் எல்லைக்கு உட்பட்டது. ஆனால் கற்பனையோ இவ்வுலகையே சுற்றிக் கொண்டிருக்கிறது.

- ஆல்பர்ட் ஐன்ஸ்டின்

✱ ஒருவன் எதிர்காலத்தில், வெற்றிபெற விரும்பினால், அவன் நிகழ்காலத்தை முடிந்த வரையில் சிறப்பாகப் பயன் படுத்தட்டும்.

- மேரி பெக்கர் எட்டி

✱ சந்தர்ப்பம் என்பது இல்லையேல் திறமை என்பதும் இல்லை.

- நெப்போலியன்

✱ நகைச்சுவை ஒன்றே பக்க விளைவு ஒன்றும் இல்லாத அரிய மருந்தாகும்.

- அர்னால்டு கிளாசோ

✱ குழந்தைகள் ஈரமான சிமெண்டுக்கு ஒப்பானவர்கள். அவர்கள் மேல் எதுவெல்லாம் விழுகிறதோ, அவை தம் முத்திரையை அவர்கள்மீது பதித்து விடுகின்றன.

- ஹெய்ம் ஜினாட்

- பா.தர்ஷிணி, உறுப்பினர் எண் : 568, பன்னிரண்டாம் வகுப்பு, சி.சி.எம். மேனிலைப் பள்ளி, இடையன்குடி



உறுப்பினர் பக்கம்







✱ உலகிலேயே மிக வேகமாக ஓடும் பூச்சி இனம் கரப்பான் பூச்சி

✱ பறக்கும் பூச்சியினத்தில் மிக நீண்ட பயணம் செய்யும் இனம் வண்ணத்துப் பூச்சி (4 ஆயிரம் கி.மீ.)

✱ கொசுவில் மலேரியா நோயினை பரப்பும் இனம் அனோபிலிஸ்

✱ அதிகமான சத்தம் எழுப்பும் பூச்சியினம் சிகாடா

✱ ஆண் தேனீயின் ஆங்கில பெயர் ட்ரோன்

- செ.விவேக்,
உறுப்பினர் எண் : 288,
நா.சு.வி.வி. ஆண்கள் மே.நி. பள்ளி,
பட்டிவீரன்பட்டி



✱ உலகிலேயே குறைந்த எழுத்துக்களைக் கொண்ட மொழி ஹோனலுலு. இம்மொழியில் உள்ள எழுத்துக்கள் மொத்தம் 13.

✱ ஆர்டிக் பிரதேசத்தில் உள்ள நரிகள் குளிர்காலத்தில் வெள்ளையாகவும் கோடைக் காலத்தில் சாம்பல் நிறத்திலும் இருக்கும்.

✱ உலகில் நீண்ட இறகு உடைய பறவை கிரே ஆர்கஸ் பீசண்ட்

✱ தொடர்ந்து இரண்டு முறை இந்திய ஜனாதிபதியாக தேர்ந்து எடுக்கப்பட்டவர் பாபு ராஜேந்திர பிரசாத்.

- ஜி.ரங்கராஜன், உறுப்பினர் எண் 480,
சென்னை

'அரியாமல்' செய்த தப்பு!

''அவர் ரொம்பவும் பயந்தாங்கொள்ளி!''

''அப்படியா?!''

''எறும்பு கடிச்சாகூட டாக்டர்கிட்டே போய் உடம்பைக் காட்டுவார்னா, பாரேன்!''

- அனன்யா, திருச்சி

சாப்பிடுபவர் : என்ன சர்வர் இது, சாம்பார்ல காய் முழுக முழுசா இருக்க?

சர்வர் : 'அரியாமல்' செய்த தப்புக்கு மன்னிச்சிடுங்க சார்.

- ச.ஆ.கேசவன், இனாம்மணியாச்சி

ஆசிரியர் : மேலே தூக்கியெறியிற பந்து ஏன் கீழே விழுது?

மாணவன் : கடவுளுக்கு கேட்ச் பிடிக்கத் தெரியாது சார்.

- வி.திலக் ராஜ்குமார், பத்தாம் வகுப்பு, சேலம்

''உங்க வாத்தியாரை எப்படி கஞ்சர்னு சொல்ற?''

''சிலேட்டுல போடுற முட்டையைகூட சின்னதாகத்தான் போடுவார்.''

- வே.சித்ரா, கும்மிடிப்பூண்டி



விடைகள் பக்கம்



சரியான்னு பாருங்க!

II. 1.கம், 2.கை, 3.பதி, 4.பரம், 5.வி, 6.ரம், 7.மை, 8.வி, 9.மர், 10.கம்

III. 1.பிட்யூட்டரி, 2.புழலேரி, 3.யுரி, 4.மூகாரி, 5.மேரி கியூரி, 6.மெர்க்குரி, 7.கன்னியாகுமரி, 8.உப்புவரி, 9.பாண்டிச்சேரி, 10.ஓம்பூரி

I.

ஸ்கேல் 10 : விலை ரூ.2 = 10 x 2 = 20

பென்சில் 20 : விலை ரூ.1=20 x 1 = 20

ரப்பர் 20 விலை

50 காசுகள் = 20 x .50 = 10

மொத்தம் ரூ.50

(பென்சில் ரப்பர் எண்ணிக்கை சமமாக உள்ளன)

ஐந்து வித்தியாசங்கள் :

1. சட்டையில் டிசைன், 2. நாயின் கழுத்துப்பட்டை, 3.பெண்ணின் கை, 4.மரத்தின் மட்டை, 5.குழந்தையின் கவுன்

அன்பு நண்பர்களே...

'கோகுலம் எக்ஸ்பிரஸ்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த பல்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் - கோகுலம்

(எக்ஸ்பிரஸ் பகுதி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!

கோகுலம் சிறுவர் சங்கம்

பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

751. ஸ்ரீ ஸ்வேதா, எட்டாம் வகுப்பு, வேலுடையர் மேல்நிலைப் பள்ளி, திருவாரூர்
752. ப.வெங்கடாசலம், பத்தாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
753. சி.வெங்கடேஷ், ஏழாம் வகுப்பு, நகர மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்
754. எஸ்.நந்தகுமார், ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மே.நி.பள்ளி, புதூர்பாளையம்
755. வே.சந்திரன், முதல் வகுப்பு, வித்யா மந்திர் மெட்ரிக் பள்ளி, கும்மிடிப்பூண்டி
756. ஆர்.ஹரிஷ்மிதா, இரண்டாம் வகுப்பு, அன்னை வேளாங்கண்ணி மெட்ரிக் மே.நி.பள்ளி, கோவை
757. ஆ.அபர்ணா, ஒன்பதாம் வகுப்பு, சீயோன் பதின்ம மே.நி.பள்ளி, சென்னை
758. வை.சசிதரன், பத்தாம் வகுப்பு, காமராஜ் மெட்ரிக் மே.நி.பள்ளி, நம்பியூர்
759. ஜே.ரேவதி, ஐந்தாம் வகுப்பு, புனித மரியானா ஆங்கிலப் பள்ளி, கும்மிடிப்பூண்டி
760. இரா.ரங்கேஸ்வரன், பத்தாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
761. ஏ.எஸ்.வெங்கட்கிருஷ்ணா, ஐந்தாம் வகுப்பு, கேம்பிரிட்ஜ் மெட்ரிகுலேஷன் பள்ளி, அம்பாசமுத்திரம்
762. எஸ்.தணிகைவேல், பதினொன்றாம் வகுப்பு, நகராட்சி மே.நி. பள்ளி, காஞ்சிபுரம்
763. மு.கமலேஷ்குமார், ஒன்பதாம் வகுப்பு, அரசு மே.நி. பள்ளி, மானாம்பதி
764. மு.அர்விந்த் சண்முகம், ஆறாம் வகுப்பு, லிஸ்யூ மெட்ரிக் பள்ளி, கோவை
765. ச.முத்துமணிகண்டன், எட்டாம் வகுப்பு, நாசரேத் மெட்ரிக் மே.நி.பள்ளி, சென்னை
766. இர.ரூபா, ஐந்தாம் வகுப்பு, டி.ஏ.கே.எம். ராமம்மாள் துவக்கப் பள்ளி, இராஜபாளையம்
767. மு.பாரதி மனோன்மணி, ஏழாம் வகுப்பு, காமராஜ் மெட்ரிக் பள்ளி, நம்பியூர்
768. மா.பார்த்திபன், ஒன்பதாம் வகுப்பு, அரசு ஆண்கள் மே.நி.பள்ளி, நம்பியூர்
769. ச.பிரானேஷ், எட்டாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, நல்லூர்
770. க.வினோத்கண்ணா, ஆறாம் வகுப்பு, அழகப்பா மெட்ரிகுலேஷன் மே.நி.பள்ளி, காரைக்குடி
771. மு.அழகு, நான்காம் வகுப்பு, பாரதி மே.நி.பள்ளி, கோவை





772. க.ஷியாம்சுந்தர், எட்டாம் வகுப்பு, அழகப்பா மெட்ரிகுலேஷன் மே.நி. பள்ளி, காரைக்குடி
773. எஸ்.தனுஷ், குமரன் வித்யா ஷேத்ரம் பள்ளி, திருவண்ணாமலை
774. மூ.விக்னேஷ், நான்காம் வகுப்பு, குமரன் வித்யா ஷேத்ரம் பள்ளி, திருவண்ணாமலை
775. ஆர்.ஆர். தக்ஷன் குமார், கோஸ்ட் கார்டு ஸ்கூல், ராயபுரம், சென்னை
776. கே.எம்.நந்தினி, எட்டாம் வகுப்பு, கிரைஸ்ட் தி கிங் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்
777. செ.சரத், ஒன்றாம் வகுப்பு, பி.எம்.சி. மெட்ரிக் மே.நி.பள்ளி, தூத்துக்குடி
778. பா.கலாவதி, எட்டாம் வகுப்பு, இ.நா.உ. பெரிய நாயகி ரெங்கசுவாமி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, நிலக்கோட்டை
779. எஸ்.மாதங்கி, முதல் வகுப்பு, ஏஞ்சல் மெட்ரிக் பள்ளி, திருநின்றவூர்
780. டி.மகேஷ்பாபு, ஆறாம் வகுப்பு, பி.ஹெச்.இ.எல். ஸ்ரீராமகிருஷ்ணா மெட்ரிக் மே.நி.பள்ளி, ராணிப்பேட்டை
781. டி.திவ்யபாரதி, ஆறாம் வகுப்பு, பி.ஹெச்.இ.எல். ஸ்ரீராமகிருஷ்ணா மெட்ரிக் மே.நி.பள்ளி, ராணிப்பேட்டை
782. எம்.எஸ்.முத்துக்குமரன், ஒன்பதாம் வகுப்பு, சக்தி விநாயகர் இந்து வித்யாலயா, தூத்துக்குடி
783. இர.யட்சனா, ஏழாம் வகுப்பு, ஹில்டன் மெட்ரிக் மே.நி.பள்ளி, பழைய குற்றாலம்
784. சு.துர்காதேவி, பத்தாம் வகுப்பு, வேளாங்கண்ணி மாதா மே.நி.பள்ளி, சிவகாசி
785. த.தாரணி, இரண்டாம் வகுப்பு, புனித மார்சினா மெட்ரிக் மே.நி.பள்ளி, அம்மாபேட்டை
786. கி.சிந்து, எட்டாம் வகுப்பு, ராஜ் மெட்ரிக் மே.நி.பள்ளி, மயிலாடுதுறை
787. பா.கணேசன், எட்டாம் வகுப்பு, மு.இ. உயர்நிலைப்பள்ளி, வடபுதுப்பட்டி, தேனி
788. டி.அஜித் விஷால் மதி, மூன்றாம் வகுப்பு, பாரத் மாண்டிசோரி, கோவிலூற்று
789. இ.கிருஷ்ண பிரசன்னா, இரண்டாம் வகுப்பு, ஸ்டார் நர்சரி மற்றும் ப்ரைமரி பள்ளி, ஆழ்வார் திருநகரி
790. அபிலாஷா, படிவம் இரண்டு, எஸ்.எம்.கே. செரி கேரிங், மலேசியா
791. எஸ்.சிதாரா, எட்டாம் வகுப்பு, எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிக் பள்ளி, மதுரை
792. ஆர்.பாலகௌதம், எட்டாம் வகுப்பு, ஐ.ஜி.எம்.எம். மே.நி.பள்ளி, மதுரை

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

793. பி.கோபிநாத், ஏழாம் வகுப்பு, விவேகம் மே.நி.பள்ளி, தாராபுரம்
794. கு.புவனேஸ்வரி, ஆறாம் வகுப்பு, நாடார் மேல்நிலைப் பள்ளி, சிவகாசி
795. கே.பிரபாகரன், எட்டாம் வகுப்பு, மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி, சென்னை
796. ஏ.தியாதர்ஷணா, ஜேக் & ஜில் மெட்ரிக் பள்ளி, பாபநாசம்
797. என்.எஸ்.சௌந்தர்யா, ஏழாம் வகுப்பு, அனிலா மேல்நிலைப் பள்ளி, கோவை
798. க.யோகேஸ்வரன், ஸ்ரீ காஞ்சி சங்கர பகவதி வித்யாலயா, கொம்மடிக்கோட்டை
799. க.கோகுல் ஆனந்தன், இரண்டாம் வகுப்பு, ஸ்ரீ காஞ்சி சங்கர பகவதி வித்யாலயா, கொம்மடிக்கோட்டை
800. கே.சந்தோஷ்குமார், ஜீவனா மேல்நிலைப் பள்ளி, மதுரை




குருக்ஷேத்திரப் போர் நடந்த காலத்திலேயே மிகவும் பலம் வாய்ந்த நாடாக விளங்கியது, இன்று ஒரிசா என்று அழைக்கப்படும் கலிங்கம். அந்த அரசை உருவாக்கியவர் மகாபத் மானந்தா. அவருக்குப் பின் நந்த வம் சத்தைச் சேர்ந்த மன்னர்கள் கலிங்க நாட்டை ஆண்டனர்.

இன்றைய பீகார் அப்போது மகத நாடு என்றழைக்கப்பட்டது. மௌரிய வம்சத்தின் ஆட்சி நடந்த மகத நாடும் பலம் பொருந்திய நாடாக விளங்கியது. மகத நாட்டை ஆண்ட சந்திர குப்த மௌரியரும், அவரது மகன் பிந்து சாரரும் கலிங்க நாட்டை வெல்ல முயன்றாலும் முடியவில்லை. கி.மு. இரண்டாம் நூற்றாண்டில், பிந்துசாரரின் மகன் அசோகர் கலிங்கத்தின் மீது போர் தொடுத்து, வெற்றி பெற்றார். ஆனால் அந்தப் போர் அவரது வாழ்க்கையையே திசை மாற்றியது.

கலிங்கப் போரில் சுமார் ஒரு லட்சம் பேர் இறந்தார்கள்; சுமார் ஒன்றரை லட்சம் பேர் போர்க் கைதி களாகப் பிடிக்கப்பட்டார்கள். இந்தப் போரில் இறந்த வீரர்களின் உடல் களையும், காயமுற்று உயிருக்குப் போராடிய வீரர்களையும், போரினால் பாதிக்கப்பட்ட மக்களையும் கண்டு மனம் வெதும்பிய அசோகர், 'இனி போரே வேண்டாம்' என்ற முடிவுக்கு வந்தார். அது மட்டுமில்லாமல், அமை தியைப் போதிக்கும் பௌத்த மதத்தைத் தழுவினார். மற்ற நாடுகளில் பௌத்த சமயத்தைப் பரப்ப தன் மகனையும், மகளையும் அனுப்பி வைத்தார்.

'ஒடிஸி' பிறந்த



கோனார்க்





சில்கா ஏரி

போருக்கு எதிரான கொள்கை மற்றும் நல்லாட்சியின் வாயிலாக இந்திய சரித்திரத்தில் நீங்காத ஒரு இடம் பிடித்து விட்டார் அசோகர்.

அசோகருக்குப் பின் வந்த மன்னர்களுள் குறிப்பிடத்தக்கவர் காரவேலர். அதன்பிறகு குப்தர்கள் ஆட்சி நடந்தது. தொடர்ந்து பல்வேறு ஆளுகைகளின் கீழ் இருந்த கலிங்கம், பதிமூன்றாம் நூற்றாண்டில் முகலாயர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. அக்பரின் மகன் ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் கட்டாக் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு, ஒரிசா ஒரு தனி மாகாண அந்தஸ்துடன் விளங்கியது. ஒரிசாவில், சுமார் 200 ஆண்டுகள் நடந்த முகலாய ஆட்சி, மராத்திய மன்னர்களின் படையெடுப்பு காரணமாக முடிவுற்றது.

மண்!


● ஜகன்னாதர் கோவில் - பூரி




● ஹிராகுட் அணை

மராத்தியர் ஆட்சிக் காலத்தில் ஒரிசா பலவிதமான முன்னேற்றங்களைக் கண்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வசிக்கும் மக்கள், அங்குள்ள புகழ் பெற்ற ஜகன்னாதர் கோவிலுக்கு வரத் தொடங்கினர். மராத்திய மன்னர்கள் ஒரிய இலக்கியத்தை வளப்படுத்த உதவி புரிந்தனர். அதன்பிறகு, ஒரிசா ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. ஆங்கிலேயர்கள் ஆரம்ப காலத்தில் குடியேறிய இடங்களில் ஒன்று ஒரிசாவில் உள்ள ஹரிஹர்பூர். அடுத்து



பாலேஸ்வர், பிபிலி ஆகிய நகரங்களில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டார்கள்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது, ஒரிசா தேசிய நீரோட்டத்தில் கலந்து கொள்ளத் தவறவில்லை. ஒரிசாவைச் சேர்ந்த பல முன்னணி வழக்கறிஞர்கள் தங்கள் தொழிலை விட்டுவிட்டு, சுதந்திரப் போராட்டத்தில் குதித்தார்கள். 1922ல் மோதிலால் நேருவும், சுபாஷ் சந்திர போஸும் ஒரிசாவுக்கு வந்தது, மக்களைப் பெரும் உற்சாகத்தில் ஆழ்த்தியது.

சுதந்திர இந்தியாவில் மொழிவாரியாக மாநிலங்கள் உருவாக்கப்பட்டபோது, ஒரிசாவின் பரப்பளவு முந்தைய பரப்பளவைப் போல இரு மடங்காகியது.

சுமார் ஒன்றரை லட்சம் சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட ஒரிசா மாகாணம் 1936ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியன்று உருவானது. 2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி மாநிலத்தின் மக்கள்தொகை மூன்று கோடியே 67 லட்சம். மாநில மக்கள் தொகையில் ஆயிரம் ஆண்களுக்கு 972 பெண்கள் என்ற விகிதத்தில் இருக்கிறார்கள். ஒரிசாவில் ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள் தவிர பௌத்தர்களும் கணிசமான எண்ணிக்கையில் வாழ்கிறார்கள். மாநிலத்தில் சுமார் மூன்றில் ஒரு பங்கு வனப் பகுதியாகும். ஆண்டுக்கு சராசரியாக 150 செ.மீ. மழை பெய்கிறது. ஆனாலும் பருவ மழைக் காலத்தில் புயல் தாக்குதலும், வெள்ளச் சேதம் நிகழ்வதும் இங்கே சகஜம்தான்.

முப்பது மாவட்டங்கள் கொண்ட ஒரிசா மாநிலத்தின் சட்டமன்றம் நூற்று நாற்பத்தேழு உறுப்பினர்கள் கொண்டது. பாராளுமன்றத் தொகுதிகள் இருபத்தொன்று. ஒரிசாவிலிருந்து பத்து உறுப்பினர்கள் ராஜ்யசபைக்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

மாநில மக்களில் 63 சதவிகிதம் பேர் கல்வி அறிவு உடையவர்கள். ஒரிசாவில் சுமார் 47 ஆயிரத்து 500 கிராமங்களும், 138 சிறிய மற்றும் பெரிய நகரங்களும் இருக்கின்றன. மாநிலத்தின் மக்கள் தொகையில் பதினைந்து சதவிகிதம் பேர் நகர்ப்புறங்களில் வசிக்கிறார்கள். மாநிலத்தின் முக்கிய மொழி ஒரியா. மாநில உயர்நீதிமன்றம் கட்டாக் நகரத்தில் உள்ளது.

ஒரிசாவின் தலைநகர் புவனேஸ்வர். வங்காள விரிகுடாவை ஒட்டி அமைந்த கடற்கரை நகரம் பூரி. இங்குள்ள ஜகன்னாதர் ஆலயம் உலகப் புகழ் வாய்ந்தது. இங்கு ஆண்டுதோறும்



* ராணிகும்பா, உதயகிரி

நடைபெறும் ரத யாத்திரையின்போது, லட்சக்கணக்கான பக்தர்கள் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்து கூடுவார்கள். ஒரிய கட்டடக் கலையின்படி கட்டப்பட்

டுள்ள இந்தக் கோவில் சோட கங்க தேவா என்ற மன்னரால் பன்னிரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. 65 மீட்டர் உயரமுள்ள இந்தக் கோவிலின் முன்புறத்தில் 11 மீட்டர் உயரத்துக்கு பதினாறு பக்கங்கள் கொண்ட பிரம் மாண்டமான தூண் இருக்கிறது. கோனாரக் நகரத்தில் உள்ள



சூரியன் கோவிலில்தான் இந்த பெரிய தூண் முதலில் இருந்தது என்றும், 18ஆம் நூற்றாண்டில் ஜகன்னாதர் ஆலய வளாகத்துக்குக் கொண்டு வரப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

13ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோனாரக் சூரியன் கோவில் புகழ் பெற்றது. தேர் வடிவில் அமைந்த இந்தக் கோவிலின் கட்டட, சிற்பக் கலை காண்போரைக் கவர்ந்திழுக்கும். பல அரிய சிற்பங்கள் கொண்ட அருங்காட்சியகம் ஒன்று கோவிலில் உள்ளது. கோனாரக் கடற்கரை ஒரு சுற்றுலாத் தலமாகும். ரத்னகிரி, லலித்கிரி, உதயகிரி ஆகிய மூன்றும் அடுத்தடுத்துள்ள மலைப் பகுதிகளாகும். இங்கே பௌத்த பல்கலைக்கழகம் இருந்ததாக சீன யாத்திரிகரான யுவான் சுவாங் குறிப்பிடுகிறார்.

மகாநதி, பிராமணி, பைதாரணி, தெல், சபரி, ரிஷிகுல்யா ஆகியவை ஒரிசாவின் முக்கிய நதிகள். 64 கி.மீ. நீளமும் 16 கி.மீ. அகலமும் கொண்ட ஒரிசாவின் சில்கா ஏரி மிகவும் புகழ் பெற்றது. இந்த ஏரிக்குள் இரண்டு அழகான தீவுகள் உண்டு. ஒரிசாவில் உள்ள ஹிராகுட் அணை இந்தியாவின் நான்காவது மிகப் பெரிய அணையாகும். நாட்டின் மிகப் பெரிய சிங்க சரணாலயமும், வெள்ளைப் புலிகளுக்கான பிரத்யேக சரணாலயமும் புவனேஸ்வரின் புற நகர்ப்பகுதியில் இருக்கின்றன.

ரூர்கேலா இரும்பு எஃகு தொழிற்சாலை, தல்செர் கனநீர் தொழிற்சாலை, மஞ்சேஸ்வர் ரயில்பெட்டி பழுதுபார்க்கும் தொழிற்சாலை, ஆங்குல் அலுமினியத் தொழிற்சாலை ஆகியவை மாநிலத்தின் முக்கிய தொழிற்சாலைகளில் சில. ஒரிசாவின் பாரதீப் துறைமுகம், இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் உள்ள முக்கிய துறைமுகமாகும்.

1861ஆம் ஆண்டு வெளியான 'போத தயானி' ஒரிய மொழியில் வெளியான முதல் பத்திரிகை.

மகர சங்கராந்தி, மகா சிவராத்திரி, துர்கா பூஜை, லட்சுமி பூஜை போன்றவை ஒரிசாவின் முக்கியப் பண்டிகைகள். 'பட்ட சித்ரா' ஒரிசாவின் மண்வாசனை வீசும் ஓவியக் கலை. 'ஒடிஸி' ஒரிசாவின் தனிச்சிறப்பு வாய்ந்த நடனம். 'தல்கை', 'கூம்ரா', 'ரனபா', 'சாதயா' ஆகியவை ஒரிசாவின் கிராமிய நடனங்கள். ●

கதைப் பாடல்

அன்னை சொன்ன பாடம்!

❖ வளர்கவி ❖

விநாயகர் ஒருநாள் விளையாட்டாய்
வீதியில் திரிந்த பூனைதனை
பிடித்து முகத்தில் குச்சியினால்
குத்திக் குறும்புகள் செய்தாராம்!

உணவு உண்ண கணபதியை
உமையாள் அழைத்தார் 'வா'வென்று.
பலவகை உணவு பரிமாறி
பார்வதி உண்ணப் பணித்தாராம்!

தாயின் முகத்தைத் தற்செயலாய்
வேழ முகத்தோன் பார்த்தாராம்
வெருண்டு பயந்து எழுந்தபடி
வேதனை மிகவும் கொண்டாராம்!

அன்னை பார்வதி முகமெங்கும்
அடுக்கடுக் கான காயங்கள்!
'எப்படி வந்தது' எனக்கேட்டு
யானை முகத்தோன் பதைத்தாராம்!

'அன்பு மகனே நாயகனே!
அன்னை முகத்தில் காயங்கள்
ஆக்கிய தெல்லாம் நீதானே?!
அதனா லென்ன?' என்றாராம்!

'தாயின் முகத்தில் காயங்கள்
தனயன் செய்தல் சாத்தியமா?
நாயேன் என்ன பிழை செய்தேன்?
நவில்வாய்' என்று அழுதாராம்!

மகனைத் தேற்றி மடியமர்த்தி
மலையத் துவசன் மாமகளும்
'சற்று முன்னொரு பூனையிடம்
குத்திக் குறும்புகள் செய்தாயே!

உலகில் எல்லா உயிர்களிலும்
உமையாள் நானே வாழ்கின்றேன்
உணர்ந்து எல்லா உயிர்மீதும்
உண்மை அன்பைப் பொழி'யென்றாள்!

உலக உயிர்களின் உன்னதத்தை
உணர்ந்து போற்ற நமக்கெல்லாம்
கணபதி ராயன் கதையுதவும்,
கருத்தில் வைப்பீர் பிள்ளைகளே!!



புலி ஆட்டம்!

தமிழ்ச் செல்வி குடுகுடுவென்று வீட்டுக்குள் நுழைந்தாள். ''ரஞ்சன், அண்ணாச்சி கடையிலே உனக்கு ஃபோன் வந்திருக்கு'' என்றாள்.

ரஞ்சன் அவசரமாக செருப்புகளை மாட்டிக்கொண்டு கிளம்பினான். ரஞ்ச



னின் சித்தப்பா தம் நண்பர் வீட்டுக்குப் போயிருந்தார். எனவே அப்பாவோ அம்மாவோ சித்தப்பாவின் கைபேசியை முதலில் தொடர்பு கொண்டு, அங்கே தான் இல்லாததால் அண்ணாச்சியின் கடைக்கு ஃபோன் செய்திருக்க வேண்டும்.

ரஞ்சனின் யூகம் சரிதான். அவன் அப்பாதான் அழைத்திருந்தார்.

''என்னடா ரஞ்சா, எப்படி இருக்கே?'' என்று கேட்ட, அவன் அப்பா தொடர்ந்தார்.

''நான் வர இன்னும் நாலு நாள் ஆகும். ஒரு சந்தோஷமான செய்தி சொல்லத்தான் ஃபோன் செய்தேன்.''

அப்பா சஸ்பென்ஸ் வைக்க, ரஞ்சன் புரிந்து கொண்டான், ''அக்காவுக்கு



குழந்தை பிறந்துடுச்சா?'' என்று கேட்டான். அதற்காகத்தானே அவன் அம்மா அமெரிக்கா சென்றிருக்கிறாள்.


தொடர்ந்து ஆறு நிமிடங்களுக்கு அப்பாவும் மகனுமாகப் பேசினார்கள்.

மீண்டும் வீட்டுக்குள் அடி வைத்த போது தமிழ்ச்செல்வி ஒரு அதிர்ச்சியான தகவலைச் சொன்னாள். ''சாயந்திரம் நம்ம தெருவுக்கு புலி வரப்போகுது.''

''ஐயோ, நாம் எல்லாம் இப்பவே வேற ஊருக்குப் போயிடலாமா?'' என்று கேட்ட பிறகுதான் அவனுக்குத் தோன்றியது. அது எப்படி சாயந்தரம் புலி வரும் என்று இவள் அவ்வளவு சரியாகச் சொல்கிறாள்?

''ஐய, நிஜப்புலின்னு நினைச்சியா? புலி ஆட்டம் ஆடப்போறாங்க.''

ரஞ்சனுக்கு உற்சாகமாக இருந்தது.



* புலி என்பது துர்க்கையின் வாகனம். அதன் முதுகில் அமர்ந்தவாறு துர்க்கை காட்சி தருவதை பல சித்திரங்களில் பார்க்க முடியும்.
* நவராத்திரியின்போது புலி ஆட்டத்தை அதிகமாகக் காணலாம்.
* முஸ்லிம் திருநாளான முஹரத்தின்போதும் புலி ஆட்டம் நடைபெறுவதுண்டு.
* கர்நாடகாவில் இந்த ஆட்டத்தின் பெயர் 'ஹுலி வேஷா!' ஆந்திரப் பிரதேசத்தில் இதன் பெயர் 'புலி வேஷா.'
* வட இந்தியாவிலும் சில இடங்களில் இந்த ஆட்டத்தை ஆடுவார்கள். ஒரிசாவில்

இதற்கு முன்னால் புலி ஆட்டத்தை அவன் சினிமாவில் பார்த்திருக்கிறான்.

புலி ஆட்டத்தின் தொன்மையை அன்று மாலை சித்தப்பா விளக்கினார். ''ரொம்ப காலமாகவே புலி ஆட்டம் பிரபலமாக விளங்குகிறது. இந்த ஆட்டத்தை ஆடுபவர் தன் உடல் முழுவதும் வண்ணம் பூசிக் கொள்வார். முதலில் உடல் முழுவதும் மஞ்சள் வண்ணம் அடித்துக் கொள்வார். அதன்மேலே கருப்பு வண்ணத்தைக் கோடுகளாகத் தீட்டுவாங்க. முகத்துக்கு புலி போன்ற ஒரு முகமூடியை அணிஞ்சிக்குவாங்க.''

''இப்படி உடம்பு முழுசும் வண்ணம் தீட்டிக்கொள்ள ரொம்ப நேரம் ஆகுமே?''

''மணிக்கணக்கில் ஆகும். அத்தனை நேரமும் ஆட்டக்காரர் அசையாமல் நிற்கணும். அப்போதான் கோடுகள் தெளிவாக வரும்.''

''வாலுக்கு என்ன செய்வாங்க?'' என்று கேட்டாள் தமிழ்ச் செல்வி. புலி ஆட்டத்தை பல முறை பார்த்தவள்தான். என்றாலும் அந்த சமயத்தில் அவளுக்குக் கேள்வி வந்தது.

''வாலுக்கு எங்கே போவது? துணியிலே தான் நீளமான வாலை வெச்சுப்பாங்க'' என்றார் சித்தப்பா.

சற்று நேரத்தில் வாசலில் மேளச் சத்தம் கேட்டது. வேகவேகமாக எல்லோரும் தெருவுக்கு விரைந்தார்கள். சற்று தூரத்தில் புலி ஆட்டக் குழுவினர் வந்து கொண்டிருந்தனர். நாலு தெருக்கள் கூடுமிடத்தில் புலியாட்டம் தொடங்கியது.

புலி வேடம் அணிந்திருந்தவர் தன் வலது காலில் மட்டும் சலங்கை அணிந்திருந்தார். தொடர்ந்து பத்து நிமிடங்களுக்கு அவர் ஆடினார். முதலில் மெதுவாகத் தொடங்கிய இசை வேகமெடுத்தது. புலி வேடம் போட்டவரும் பாய்ந்து பாய்ந்து ஆடினார். இரண்டு கால்களை வைத்துக்கொண்டு, அவர் புலியின் நாலு கால் பாய்ச்சலை செய்து காட்டியது ரஞ்சனுக்குப் பிரமிப்பைப் ஏற்படுத்தியது.

இப்போது புதிதாக ஒரு ஆட்டக்காரரும் சேர்ந்து கொண்டார். அவர் காக்கி உடையும் தலையில் தொப்பியும் அணிந்திருந்தார். கையில் ஒரு துப்பாக்கி. அவர் வேட்டைக்காரர் என்பது பார்த்த உடனேயே புரிந்தது.

வேட்டைக்காரர் புலியை நோக்கி

இது 'பாக் நிருத்யா' என்று அழைக்கப்படுகிறது.

* *சாமி ஊர்வலம், தேர்த் திருவிழா போன்ற நிகழ்ச்சிகளில் புலியாட்டம் நடைபெறுகிறது.*

துளிகள்...



துப்பாக்கியை நீட்ட, புலி வேடமிட்டவர் விதவிதமாக அந்தத் துப்பாக்கியிடம் இருந்து தப்பிக்கும் வகையில் அங்குமிங் கும் பாய்ந்து மறைந்தார். நடு நடுவே வேட்டைக்காரரரைப் பார்த்து உறுமவும் செய்தார். வேட்டைக்காரன் வேடமிட்டவரும் நடுநடுவே கொஞ்சம் பயப்படுவதும், பிறகு தைரியமாகத் துப்பாக்கியால் சுட முயற்சிப்பதுமாக களிப்பூட்டினார்.

புலி வேடமிட்டவர் மறைவாகப் பதுங்கிப் பதுங்கி அந்த வேட்டைக் காரரின் பின்பக்கமாக வந்து நின்றார். பார்த்துக் கொண்டிருந்த மக்களில் சிலர் ''வேட்டைக்காரா, பின்னால் புலி நிக்குது'' என்று கத்தினார்கள். வேட் டைக்காரர் தன் கையில் இருந்த துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டு அவசரமாக ஓடி, கூட்டத்துக்கு நடுவே மறைந்தார். புலி பெருமையுடன் நின் றிருந்தது. அப்போது அந்தப் பக்கமாக ஒரு நிஜ ஆட்டுக்குட்டி வந்து சேர்ந்தது. அதைச் சட்டென்று பாய்ந்து பிடித்தார் புலி வேடக்காரர். தின்னுவது போல வாய்க்கருகே கொண்டு போனார். திமிறிய ஆட்டுக் குட்டி துள்ளியபடி வேறு திசையில் ஓடியது. புலி ஆட்டக்காரர் 'எனக்கு ஈடு யாருமில்லை' என்பதுபோல் தன் கைகளால் தொடைகளை அடித்துக் கொண்டார்.


''நம்ம ராமையா ட்ரூப்புதான் புலி வேஷம் கட்டியிருக்காங்க'' என்று அரு கில் ஒருவர் கூற, ''இந்தப்பகுதியில் புலி யாட்டத்தில் நாலைந்து குழுக்கள் இருக் காங்க'' என்று விளக்கினார் சித்தப்பா.

ரஞ்சனுக்கு, புலியாட்டம் மிகவும் பிடித்திருந்தது. கூடவே இசைக்கப்பட்ட உருமி மேளத்தின் சத்தம் அவனை மயக்கியது. நடுவே ஒருமுறை தன்னையும் அறியாமல் அவன் விசி லடித்துவிட்டு, தமிழ்ச்செல்வி ஆச்ச ரியமாகப் பார்த்தவுடன் வெட்கப் பட்டான். ●

குணசீலரின் சீடன்!

கதை: ராகுல் **குழந்தைக் கடவுள்கள் - 2** படம்: வேதா





பரிவாரங்களோடு கிளம்பினான், வழியில்...
இதென்ன மலை?
திருச் செங்கோடு



சேஷகிரி (பாம்பு மலை என்றும் சொல் வார்கள்.


பாம்பு என்றால் ஏன் படமெடுக்க வில்லை?
ஹா... ஹா...



பேசியதை, பாட்டாகப் பாடினார் பயங்கரன்.
பாம்பு படமெடுக்காது. ஏனென்றால்,...
அதற்குள் வேறொரு குரல் கேட்டது
முருகனின் வாகனமான மயில்...
...கொத்துமே என்ற பயம்தான்.
அதிர்ந்து பார்த்தார் பயங்கரன்.
நீயா பாடினாய், யார் நீ?
புலவர் குணசீலரின் சீடன்.
எந்த குணசீலர்?
பித்தன் பயங்கரனால் போட்டிக்கு அழைக்கப்பட்டுள்ள அதே குணசீலர்.!
சொல்லிவிட்டுச் சிரித்தான் அவன்.


ஏன் சிரிக்கிறாய்?
'உனக்கு பாட்டு வராது' என்று விரட்டப்பட்டவன் நான்.
உண்மை யாகவா?
ஆம்.
பயனற்ற நானே இப்படி என்றால்.... என் குரு...
சிறுவன் மறைந்தான்.
மறுநாள் ஓலை...
குணசீலரே... உம்மிடம் தோற்றேன். எனக்கு அருள் செய்யுங்கள்.
குணசீலருக்குப் புரியவில்லை.
வேலவா! இதென்ன மாயம்?
சிறுவனாக வந்து பயங்கரனுக்குப் பாடம் புகட்டிய வேலவன் புன்னகை தவழ நின்றான்.



சூரிய பறவை, குகை நரிச் சிலந்தி... என அழியும் நிலையில் உள்ள உயிரினங்கள் மிக அதிகம்! விலங்குகளில் ஜாவா புலி, ஜப்பானிய கடல் சிங்கம், சிரியா காட்டுக் கழுதை.




அறிவியல் எவ்வளவோ கண்டுபிடிப்புகளை முன்வைத்தாலும், அதைவிட ஆச்சர்யப் படுத்துவது இயற்கைதான்!

மறைந்து வரும் உயிரினங்கள்!

பூமியின் உயிர்க்கோளச் சுழற்சிக்கு அடிப்படையாக அமைபவை தாவரங்களும், விலங்குகளும். இவற்றில் விலங்குகள் தொடர்ந்து அழிந்து வருகின்றன. 10,000க்கும் மேற்பட்ட பறவையினங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன. மில்லர் பறவை, எலிகண்ட் பறக்கும் நரி, காட்டு நாய்களில் பல வகை... என்று பல இனங்கள் மறைந்துவிட்டன. அவற்றுள் பெசன்ட், ரம்ப மீன், கிரிப் ஆகியவற்றைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

பெசன்ட் (Pheasant) : பெயரைக்

கேட்டவுடனே, சென்னையிலுள்ள பெசன்ட் நகரைச் சுருக்கி எழுதியிருக் காங்கன்னு நினைக்க வேண்டாம். இந்தப் பெசன்ட் ஒரு பறவை. பார்ப்பதற்கு மயில் போலவே இருக்கும். சில வகை களில் பார்த்தால், இது சேவலா இல்லை மயிலா என்று குழப்பமே வரும். கம்பி வால் பெசன்ட், ப்ளித்ஸ் ப்ராகோபான், கோபாட்ஸ், இம்பீரியல், சீர், எலியட்ஸ், மிகாடோ, ஸ்வம்கோஸ், எட்வர்ட்ஸ், பாலவான் மயில் பெசன்ட்... என்று குட்டிப் பாப்பாக்களை வளர்க்கின்றன. விதை மற்றும் பூச்சிகளே இவைகளுக்கு இரையாக அமைகின்றன. சில்வர் பெசன்ட்கள் 125 சென்டிமீட்டர் நீளம் கொண்டவை. ஆண் சில்வர் பெசன்ட்கள் வெள்ளை நிறத்தில் காணப்படும். பெண் சில்வர் பெசன்ட்கள் ஆலிவ் பிரௌன் நிறம் கொண்டவைகளாக விளங்கும். இவை தென் கிழக்கு ஆசியா, சீனா, கிழக்கு பர்மா, கம்போடியா, லாவோஸ், தாய்லாந்து போன்ற பகுதிகளில் அதிக



அவற்றின் தோற்றம் மற்றும் நிறத்தைக் கொண்டு பல பிரிவுகளாகச் சொல்கிறார்கள். இதில் ஆண் பெசன்ட்கள் பல வண்ணங் களில் அழகான இறக்கை களோடு காணப்படும். பெண் பெசன்ட்களை விடத் தோற்றத்தில் பெரியதாக இருக்கும். இவை மொத்தம் 35 வகைகளில் காணப் படுகின்றன. இந்தப் பெசன்ட் வகை களில் அம்மா பெசன்ட்கள்தான்



மாகக் காணப்படுகின்றன.

துப்பாக்கி சுடும் பயிற்சியில், இலக்காக இந்த பெசன்ட்கள் பயன்படுத்தப் படுகின்றன. உதாரணமாக இங்கிலாந்து மன்னர் ஐந்தாம் ஜார்ஜ், 1913ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தன்னுடைய ஆறு நாள் வேட்டையில், 3927 பெசன்ட்களைச் சுட்டு வீழ்த்தியுள்ளார். தற்போது சர்வதேச சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கூட்டமைப்பு, பெசன்ட் வேட்டைக்குத் தடை விதித்துள்ளது.

ரம்ப மீன் (Saw Fish) : மரம் அறுக்குற ரம்பத்தைக் கடலில் போட்டால் எப்படி இருக்கும்? அதே மாதிரி, வாயில் நீளமான ரம்பத்தைக் கட்டிவிட்டது போன்ற தோற்றத்துடன் காட்சி தருகிற மீன் இது. மீனின் இந்த நீளமான வாய்ப் பகுதி 'ரோஸ்ட்ரம்' எனப்படுகிறது. இது இந்த மீனுக்கு உணர்வுக் கருவியாகப் பயன்படுகிறது. மறைந்து இருக்கும் உணவுப் பொருளைக் கண்டுபிடிக்க உதவுகிறது. எதிரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ளவும், இரையைப் பிடித்துக் கொள்ளவும் இந்த ரம்பம் பயன்படுகிறது. குறைந்தபட்சம் 4 அடியிலிருந்து அதிகபட்சமாக 23 அடிகள் கொண்ட ரம்ப மீன்கள் உள்ளன. தோற்றம் அச்சுறுத்துவதாக இருந்தாலும், பொதுவாக இவை மனிதர்களைத் தாக்குவதில்லை. இந்த ரம்ப மீனின் எல்லா வகைகளுமே அழியும் நிலைக்கு வந்துவிட்டன. இந்த மீனின் எண்ணெய் மருந்துப் பொருளாகக் கருதப்படுகிறது. அதனால், பெருமளவில் வேட்டையாடப்படுகிறது. அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் இந்த மீன்களை பிடிப்பது சட்ட விரோதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. உலக அளவில் ரம்ப மீன் வர்த்தகத்தை CITES என்னும் அமைப்பு தடை செய்துள்ளது.

கிரிப் (Grebe) : கிரிப்கள் நன்னீரில் வாழும் பறவை





குழந்தை இலக்கிய தின விழா!

குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா அவர்களின் 86 ஆவது பிறந்த தின விழா 07.11.2008 அன்று காரைக்குடி, 'உமையாள் அரங்க'த்தில் நடைபெற்றது. அழகப்பா மாண்டிசோரி, அழகப்பா ஆயத்தப் பள்ளி, அழகப்பா மெட்ரிக் பள்ளி மற்றும் கவிமணி குழந்தைகள் சங்கப் பிள்ளைகள் வழங்கிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

விழாவில் பால நடராஜன், நற்கதை நம்பி அய்க்கண், பாவலர் மணி ஆ.பழநி, புலவர் இராம. அருச்சுனன், பேராசிரியர்கள் கதி.கணேசன், ஆரியப்பன், சென்னை குழந்தை எழுத்தாளர் மாயன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கள். குளிர்காலத்தில் இடம் பெயர்ந்து செல்லுகின்றபோது, கடலுக்குள் அப்படியே ஒரு சுற்றுலா சென்று வரும். 22 வகையாக இருந்த 'கிரிப்'களில், தற்போது ஆறு வகைகள் மட்டுமே காணப்படுகின்றன. கிரிப்கள் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய வடிவங்களிலும் காட்சி தருகின்றன. இவை தண்ணீரில் நன்றாக நீந்தும் ஆற்றல் பெற்றவை. கால்கள் உடலின் பின்புறம் காணப்படுவதால், குறைந்த தூரம் மட்டுமே இவைகளால் ஓட இயலும். பின்னர் பொத்தென கீழே விழுந்து விடுகின்றன. கிரிப்களில் சில பறக்கும்; சிலவற்றால் பறக்க இயலாது. இவற்றின் எடை 120 கிராம்களிலிருந்து 1.7 கிலோ வரை உள்ளன. இவை வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் அதிகமாகக் காணப்படுகின்றன. பழங்கால கிரிப்களின் புதை படிவங்கள் பல இடங்களில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. உலக உயிரினங்கள் பாதுகாப்புக் கூட்டமைப்பு, அலோடாரா, அடிட்லன், கொண்டை கிரிப், சிவப்புக் கழுத்து கிரிப், பிளவுபட்ட வாய்கொண்ட கிரிப் ஆகிய இனங்கள் மறையும் நிலையில் உள்ளதாக அறிவித்துள்ளது. வட அமெரிக்கா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் கிரிப் வேட்டை தடை செய்யப்பட்டுள்ளது.



'இயற்கை, எல்லா உயிர்களும் வாழ்வதற்கான வாய்ப்பை வழங்கியிருக்கிறது. அதை, தங்கள் தேவைக்காக ஒட்டு மொத்தமாக மனிதன் அழிப்பது எந்த வகையிலும் நியாயமில்லை' என்கிறார்கள் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள். உண்மை தானே! ●



எறும்பு : ஏன் இப்படி ஓடி வர்றே?

யானை : ஒரு சிங்கம் துரத்துது.

எறும்பு : என் பின்னால் ஒளிஞ்சுக்கோ.

- ஆர்.என்.கணேஷ்பாலாஜி, 7ஆம் வகுப்பு, கிருஷ்ணசாமி மெமோரியல் மெட்ரிக் மே.நி. பள்ளி, கடலூர்



டாக்டர் : ஓட்டல்ல சாப்பிடாதீங்கன்னு உங்களுக்கு எத்தனை தடவை சொல்றது?

நோயாளி : இல்லை டாக்டர் பார்சல் வாங்கிக்கிட்டுப் போய் வீட்டுல வெச்சு தான் சாப்பிடுறேன்.

வேஸ்ட் பேப்பர் ரோஸ்ட்!

''முட்டை நடுவில் என்ன இருக்கு?''

''மஞ்சள் கரு.''

''இல்லை 'ட்' இருக்கு.''

- ஏ.ராஜலட்சுமி, ஏழாம் வகுப்பு, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி





சாப்பிட வந்தவர் : என்னப்பா இது? பேப்பர்ரோஸ்ட் அழுக்கா இருக்கே.

சர்வர் : இது வேஸ்ட் பேப்பர் ரோஸ்ட் சார்?

- ர.கீர்த்தனா, எட்டாம் வகுப்பு, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி



நெஞ்சில் உறைத்த கதை!

ஹலோ, டாக்டர் ஸ்பீக்கிங் - 10 பகுதியின் மூலமாக இரத்தத்தின் வகைகளைப் பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள முடிந்தது.

- பி.சர்வேஸ்வரன், உறுப்பினர் எண் : 456, மூன்றாம் வகுப்பு, ஜீவனா பள்ளி, மதுரை

'கடி O கடி' புதிய பகுதி சிரிப்பை சிந்திப்பை அள்ளித் தந்ததால் 'ரெடி O ரெடி' என்று பங்கேற்கத் தூண்டியது. தீபாவளி வெடி தீர்ந்தாலும் கோகுலம் 'கடி O கடி'க்கு முடிவேது? ஒரு பிடி பிடித்துவிட வேண்டியதுதான்.

- ஆர்.கே.கார்த்திக், மணலிவிளை

முகப்பு அட்டையில் ஃபோட்டோ வாக இல்லாமல் ஓவியமாக வெளிவந்த இந்த மாத கோகுலம், காண்பதற்கு மிகவும் அழகாக உள்ளது.

- மோ.உஷாராணி, அரசு நகர் மேல்நிலைப் பள்ளி, அரியலூர்

கையைவைத்தோகல்லைவைத்தோ அடிக்கும் அடியைவிட 'தாத்தா தந்த சொல்லடி'ரவிக்குமட்டுமல்ல...படிப்போர் நெஞ்சிலும் உறைத்தது! கதையின் கரு அழகான பொன்னகைதான்!

- ஆர்.ஜி.ஜே. ஜெய்ஹரிதா, செல்வமருதூர்

கோகுலம் சிறுவர் சங்கத்தில் இது வரை 750 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளது ஆச்சரியத்தை அளிக்கிறது. முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் ஆசைப்படி அத்தனை பேரும் மாணவர்கள் என்பதை நினைக் கும்போது மிகவும் பெருமைப்படுகிறேன்.

- கி.சிந்து, ராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை

ஆரோக்கியம் பகுதியில், 'கண்கள் ஒளி பெற...' மூலம் கீரைகள் ஒவ்வொன் றும் நம் கண்களுக்கு வழங்கும் நன்மை களை அறிந்துகொள்ள முடிந்தன. சிறந்த தகவல்.

- எம்.சிவரஞ்சனி, உ. எண் : 179, ஸ்ரீமகாதேவ குருஜி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, வலங்கைமான்

எந்தக் குழந்தையாக இருந்தாலும் சரி; இளம் தளிராக இருக்கும்போதே கல்வி யிலும் ஆளுமைப் பண்புச் செயல்களி லும் சாதனைப் படைக்கும் குழந்தைகளை பாராட்டி பரிசினையும், பாராட்டுச் சான் றிதழையும் வழங்குவதில் கோகுலத்துக்கு நிகர் கோகுலம்தான்.

- ஆர்.எஸ்.கிருஷ்ணஸ்வாமி, ஸ்ரீமுஷ்ணம்

விடையைச் சொல்; பரிசை வெல் - 18

1. ஒரிசாவில் புலியாட்டத்தின் பெயர் ....

2. ரம்ப மீனின் நீளமான வாய்ப்பகுதியின் பெயர் ....

3. அச்சு எந்திரத்தை அறிமுகப்படுத்தியவர் ....

4. நால்சரோவர் சரணாலயம் உள்ள மாநிலம் ....

5. 'டு சில்ட்ரன் ஸாங்ஸ் ஃப்ரம் தி ஈஸ்ட்' என்ற அனிமேஷன் படத்தை தயாரித்தவர் ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

....

வீட்டு முகவரி : ....

....

பின்கோடு ....



போட்டி பரிசு ரூ.1000/-

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்திசெய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 15.12.2008

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம், (பரிசப் போட்டி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை-32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


776


777


778


779


780


781


782


783


784


785


786


787


788


789


790


791


792


793


794


795


796


797


798


799


800

பெயர் மற்றும் விவரங்கள் 57 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/10[illegible]-08 • Licensed to post
without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 • Registered as a Newspaper in Srilanka



மறைந்து வரும் உயிரினங்கள்!

